ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஜனவரி. 24, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 108 ❖ ரூ.10

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம்

# ஒப்புதல்

## டாஸ்மாக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், மதுபானங்கள் மீதான வரியை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிப்பு

**சென்னை, ஜன. 24–**

**சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின்தலைமையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம்நேற்றுநடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழில் துறை, சமூகநலத் துறை மற்றும்கலால்துறைசார்பில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக, மாநிலமகளிர் கொள்கைக்கு அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.**



தொழில் துறையின் சார்பில், பல்வேறு புதிய நிறுவனங்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன. ஏற்கெனவே, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.6 லட்சம் கோடிக்கு அதிகமான முதலீடுகள்ஈர்க்கப்பட்டன. சமூக நலத்துறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மாநில மகளிர்வரைவுக்கொள்கை வெளியிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில், நடந்த தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில்,மாநில மகளிர் கொள்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநில மகளிர் கொள்கை என்பது பெண்கள் புகார் அளித்தால் 24 மணி நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும். பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கு தலைமைப் பொறுப்புகளில் 50 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். அரசியலுக்குவரவிரும்பும் பெண்களுக்கு6மாதகால பயிற்சி என்பது உள்ளிட்ட முக்கிய அம்சங்களைக் கொண்டது. இந்தக் கொள்கையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுத்த மாதம் வெளியிடவுள்ளார்.

கலால் துறை சார்ந்த முக்கிய முடிவுகளும் இந்த அமைச்சரவைக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன. டாஸ்மாக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், டாஸ்மாக் மதுபானங்கள் மீதான வரியை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள சட்டசபைக் கூட்டத்தொடருக்கு ஆயத்தமாவது, ஆளுநர் உரையில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் மற்றும் புதிய திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுத்த மாதம் வெளிநாடு செல்கிறார். இந்த வெளிநாட்டு பயணத்துக்கும் அமைச்சரவையில்ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஜன.27–ம் தேதியன்று ஸ்பெயின் செல்லும் முதல்வர் ஸ்டாலின் பிப்.12–ம் தேதி தமிழகம் திரும்புகிறார். முதல்வருடன் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் துறை செயலாளர்உள்ளிட்டோர் செல்கின்றனர்.

## காந்தியின் போராட்டம் பலனளிக்கவில்லை : நேதாஜி இல்லையென்றால் இந்தியா சுதந்திரமடைந்திருக்காது – ஆளுநர் ஆர்.என்.ரவி பேச்சு

சென்னை : ஜன. 24–

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தியின் போராட்டம் பலன் அளிக்கவில்லை என்று ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியிருப்பது பேசுபொருளாகியிருக்கிறது.

நேற்றுஇந்தியசுதந்திரப் போராட்ட வரலாற்றில் முக்கிய நபரான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாள். இதனை முன்னிட்டு பல்வேறு இடங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த நிலையில், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நேதாஜி பிறந்தநாள் நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்துகொண்டார்.



அப்போதுநிகழ்ச்சியில் மாணவர்களின் முன்னிலையில் பேசிய ஆளுநர் ரவி; காந்தியின் சுதந்திர போராட்டம் பலனளிக்கவில்லை. இந்திய தேசிய ராணுவத்தின் கடற்படை மற்றும் விமானப்படையின் புரட்சியே இந்தியாவின் சுதந்திரத்திற்கு காரணம். கலாச்சார சின்னமாகவும், ஆன்மீக சின்னமாகவும் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் விளங்குகிறார்கள்.இந்திய சுதந்திர போராட்டத்தில் நேதாஜியின் இந்திய ராணுவ படையில் தான் தமிழர்கள் அதிகளவு நிறைந்திருந்தனர். வேலு நாச்சியார், வ.உ.சி போன்றவர்களை போல நேதாஜியின் தியாகம் போற்றப்பட வேண்டியவை.

சுதந்திரத்திற்காக போராடிய தமிழ்நாட்டு வீரர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. வேலு நாச்சியார், வ.உ.சி போன்றவர்களை போல நேதாஜியின் தியாகத்தையும் போற்ற வேண்டும். நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவு படையின் கட்டமைப்புக்கு பின் பல தலைமுறைகளுக்கு பிறகே இந்திய ராணுவத்தில் பெண்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நாட்டின் சுதந்திரத்தை பொறுத்தஅளவில்,இந்திய தேசிய காங்கிரஸின் ஒத்துழையாமை இயக்கம் ஆங்கிலேயரை இந்தியாவில் இருந்து வெளியேற்றுவதற்கான காரணமில்லை என இங்கிலாந்து முன்னாள் பிரதமர் அட்லீ பதிவு செய்துள்ளார். மகாத்மா காந்தியின் சுதந்திர போராட்டம் பலன் அளிக்கவில்லை. 1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தான் காரணம். நாட்டின் தேச தந்தை நேதாஜிதான்" என்று கூறியுள்ளார்.

## அசாமில் ராகுல் காந்தியின் யாத்திரை தடுத்து நிறுத்தம் காங்கிரஸ் தொண்டர்கள் – காவல்துறையினர் இடையே தள்ளுமுள்ளு

**குவாஹாட்டி, ஜன. 24–**

**இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை மேற்கொண்டுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி அசாம் தலைநகர் குவாஹாட்டிக்குள் நுழையவிடாமல் தடுக்கப்பட்டதால் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.**



காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை மேற்கொண்டுள்ளார். மணிப்பூரில் தொடங்கிய இந்த யாத்திரை நாகலாந்து வழியாக தற்போது அசாம் வந்தடைந்துள்ளது. அசாமில் நியாய யாத்திரை நடத்தி வரும் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி நேற்று முன்தினம் திங்கள்கிழமை அங்குள்ள ஸ்ரீமந்த சங்கரதேவா பிறந்த இடமான படத்ராவா சத்ராவில் சாமி தரிசனம் செய்ய திட்டமிட்டிருந்தார். துறவி, அறிஞர், சமூக – மத சீர்திருத்தவாதியான ஸ்ரீமந்த சங்கர்தேவா, அசாம் கலாச்சாரம், மத வரலாற்றின் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அறியப்படுகிறார். ஆனால், அந்தக் கோயிலுக்குச் செல்ல அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு, ஒரே நாளில் ராமர் கோயில் திறப்பு, ராகுல் யாத்திரை என இரண்டு நிகழ்வுகள் நடந்தால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படலாம் எனக் காரணம் கூறப்பட்டது. இதன் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருப்பதாக ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் நேற்று அசாம் தலைநகர் குவாஹாட்டிக்குள் நுழைய முயன்றபோது அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். இதனால் காவல்துறையினருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. ராகுல் காந்தி குவாஹாட்டியின் பிரதான பகுதிகள் வழியாக யாத்திரையை மேற்கொள்ளாமல் பைபாஸ் சாலை வழியாக செல்ல வேண்டும். போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால் பைபாஸ் சாலையில் செல்ல வேண்டும் என்று கூறி யாத்திரை தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஏற்கெனவே ராகுல் காந்தி யாத்திரை திட்டமிட்ட பாதையில் நடக்கவில்லை என்று அசாம் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நேற்று போக்குவரத்து நெரிசல் காரணத்துக்காக தடுக்கப்படுவதாக போலீஸார் கூறியதால் காங்கிரஸ் தொண்டர்கள் கொந்தளித்தனர்.


இதற்கிடையில், அசாம் – மேகாலயா எல்லையில் பேருந்தின் கூரையில் நின்றபடி ராகுல் காந்தி மேகாலயாவின் தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர், "நான் உங்களை சந்தித்து உரையாட வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் உள்துறை அமைச்சர் அசாம் முதல்வரிடம் பேசி மேகாலயா தனியார் பல்கலைக்கழகத்தில் நான் அனுமதிக்கப்படக் கூடாது என்று கூறியுள்ளார். அவர் அந்தப் பல்கலைக்கழக துணை வேந்தரிடம் பேசியுள்ளார். மேல்மட்ட அழுத்தத்தினால் நான் உங்களை அங்கே சந்திக்க இயலவில்லை.

இங்கே பிரச்சினை, நான் அனுமதிக்கப்படவில்லை என்பது இல்லை. நீங்கள் யாருடைய பேச்சைக் கேட்க விரும்புகிறீர்களோ அதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையை உங்கள் விருப்பப்படி வாழ வேண்டுமே தவிர மற்றவர்கள் வகுக்கும்படி வாழக்கூடாது. உங்களை அவர்கள் அடிமைகளாக்கப் பார்க்கிறார்கள். ஆனால் யாரும், எந்த சக்தியும் அதை இந்த பிரபஞ்சத்தில் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும்" என்று விமர்சித்து ராகுல் காந்தி பேசினார்.

## ஜெயலலிதாவின் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும் பெங்களூரு சிபிஐ சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

பெங்களூரு : ஜன. 24–

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நகைகளை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பெங்களூரு சிபிஐ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா மீது வருமானத்திற்குஅதிகமாக சொத்து சேர்த்ததாக 1996 ம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்துபோயஸ்தோட்டம் இல்லத்தில் இருந்து தங்க, வைர நகைகள், வெள்ளிப் பொருட்கள், கைக் கடிகாரங்கள் என ஏராளமான பொருட்களை கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.

இவ்வழக்குவிசாரணை பெங்களூருநீதிமன்றத்தில் நடைபெற்ற நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட நகை உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் அங்குள்ள கருவூலத்தில் வைக்கப்பட்டன. இந்த வழக்கு முடிந்து சசிகலா உள்ளிட்டவர்கள் சிறை தண்டனை அனுபவித்து வெளியில் வந்துள்ளனர். ஆனாலும்,இந்த நகைகள் அனைத்தும் தற்போதும் கர்நாடகா கருவூலத்தில் உள்ளன. இந்தநிலையில் ஜெயலலிதாவின் பொருட்களை ஏலம் விட வேண்டுமெனவும், அதன்மூலம் வரும் பணத்தை நலத் திட்டங்களுக்குபயன்படுத்த வேண்டுமெனவும் சமூக ஆர்வலர் நரசிம்ம மூர்த்தி என்பவர்பெங்களூருசிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கில் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா, அரசால் பறிமுதல் செய்யப்பட்ட ஜெயலலிதாவின் பொருட்களில் தனக்கு உரிமை உண்டு எனவும், அவற்றை தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் மனுதாக்கல் செய்தார். இந்த நிலையில் ஜெயலலிதாவின் பொருட்கள்தொடர்பான வழக்கு சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம்திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஹெ.ஏ.மோகன், "நகைகளை ஏலம் விடுவதற்குப் பதிலாக, தமிழக அரசின் உள்துறை மூலமாக தமிழகத்துக்கு மாற்றுவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஆகவே, தமிழக அரசு செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஒரு அதிகாரியை நியமித்து அவர் மூலமாக போலீஸாருடன் இணைந்து நகைகளை பெற்றுக்கொள்ளவருமாறு உத்தரவிடுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து விரைவில் ஜெயலலிதாவின் நகைகளை தமிழகத்திற்கு எடுத்துவரும் பணிகள் தமிழக அரசின் சார்பில் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணையை நடத்துவதற்கு கர்நாடக அரசு செய்த செலவினங்களுக்காக கர்நாடகஅரசின்பெயரில் 5 கோடி ரூபாய்க்கான வரைவோலையை அனுப்புமாறும் தமிழக அரசுக்கு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## 'நமத்து போன மிக்சர்' : திமுக மாநாட்டைக் கிண்டல் செய்த அண்ணாமலை

**திருச்சி : ஜன. 24–**

**திமுக இளைஞரணி மாநாடு நமத்து போன மிச்சர் என திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பாஜக மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.**



சிதம்பரத்தில் நடைபெறும் 'என் மண், என் மக்கள்' யாத்திரையில் கலந்து கொள்வதற்காகசென்னை விமான நிலையத்தில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வருகை தந்தார். அவருக்கு கட்சியினர்சார்பில்உற்சாக வரவேற்பு அளித்தார். பின்னர் அண்ணாமலை, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அவர், "சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாடு, கலைஞர் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்று அனைத்துநிகழ்வுகளையும் செய்தனர். திமுக இளைஞரணி மாநாடு ஒரு நமத்துப்போன மிச்சர். பிரதமர் மோடி திருச்சி மீது அதிக பற்றுடன் இருக்கிறார். பராம்பரிய நகரமாக அவருக்கு திருச்சி மீது ஒருவிசாலமான பார்வை இருக்கிறது. திருச்சி தலைநகராக வேண்டும் என்ற கருத்தும் பரவலாக உள்ளது. அதனால் தான் புத்தாண்டின் முதல் நிகழ்வாக திருச்சியில் நடந்த நிகழ்வில் பங்கேற்றார்" என்றார்.

மேலும்,"எங்களுக்கும், திருச்சி பற்றிய ஒரு மிகப்பெரிய அக்கறை உண்டு. பாஜக சார்பில் மிகச்சிறந்தவேட்பாளரை நிறுத்துவோம். திமுகவின் ஊழல்கள் தொடர்பான ஆதாரங்களைத் தொடர்ந்து வெளியிடுவேன். ஒற்றைக் குடும்ப ஆட்சி என்பதை நிறுத்தவே பாஜக விரும்புகிறது"எனகூறினார்.

## கோடநாடு வழக்கில் எடப்பாடியை தொடர்புபடுத்தி கருத்து தடையை நீக்கக் கோரி உதயநிதி பதில் மனு

**சென்னை : ஜன. 24–**

**கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில், அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தொடர்புபடுத்தி கருத்துக்களை தெரிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை உயர் நீதிமன்றத்தில் பதில்மனு தாக்கல் செய்துள்ளார்.**



இது தொடர்பான பதில் மனுவில், "கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் எடப்பாடி பழனிசாமியை தங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டும் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அதனால் இந்த வழக்குக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என எடப்பாடி பழனிசாமி கூற முடியாது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கடந்த ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதி வெளியிட்டிருந்த அறிக்கையில், சனாதனம் குறித்த புரிதல், கோடநாடு கொலை கொள்ளை வழக்கின் நிலைப்பாடு, ஆளுனருடன் நட்பு ஆகியவற்றை குறிப்பிட்டு எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கையில் தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், அவதூறு பரப்பும் வகையிலும், உதயநிதி பேசியிருப்பதாக கூறி சென்னை உயர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி தரப்பில், ஒரு கோடியே10லட்சம்ரூபாய்மான நஷ்ட ஈடு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தன்னைப் பற்றி பேச அமைச்சர் உதயநிதிக்கு தடை விதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் எடப்பாடி பழனிசாமியை தொடர்புபடுத்தி கருத்து தெரிவிக்க உதயநிதி ஸ்டாலினுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், "ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் மட்டுமே அறிக்கை வெளியிட்டதாக கூறியிருக்கிறார். கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் எடப்பாடி பழனிசாமியை தங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டும் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அதனால் இந்த வழக்குக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என எடப்பாடி பழனிசாமி கூற முடியாது" என உதயநிதி ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

கோடநாடு சம்பவம் நடந்தபோது எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தார் என்பதால் பொது ஊழியராக அவரது செயல்பாடு குறித்து பொதுநலன் அடிப்படையில் அறிக்கை வெளியிட்டதாகக் கூறியுள்ள உதயநிதி ஸ்டாலின், தனக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என பதில் மனுவில் கோரியிருக்கிறார்.

உதயநிதி ஸ்டாலினின் பதில் மனுவுக்கு விளக்கமளிக்க எடப்பாடி பழனிசாமி தரப்பில் அவகாசம் கோரப்பட்டதை ஏற்று, வழக்கின் விசாரணையை பிப்ரவரி 26ஆம் தேதிக்கு நீதிபதி என்.சதீஷ்குமார் தள்ளிவைத்தார்.

# இன்று

24-1-24



திருமாந்துறை திருத்தலம் : விவசாயம் செழிக்க அருளும் அற்புத தலம்.
சக வருடம் 1945 மாகம் 04

| சோபகிருது தை 10 | JAN - WED புதன் | ரஜப் 12 வளர்பிறை 024 / 342 |
|---|---|---|

வளர். சதுர்த்தசி 40.19 (மா. 10.43) திருவாதிரை 02.51 (கா. 07.43) தியாஜ் 34.30 சித்த. கடமுகூர்த்தம். பழனி ஸ்ரீஆண்டவர் காலை தெய்வானை திருமணம். இரவு வள்ளி திருமணக்காட்சி. குன்றக்குடி, திருப்புடைமருதூர் இத்தலங்களில் ரதோத்ஸவம். செடி கொடிகள் வைக்க நன்று.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 10.30-11.30 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்
மகர லக்கனம் இருப்பு நா. 3 வி. 37
கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 6.35
சந்திராஷ்டமம் : அனுஷம்
வருமுன் காப்பதே அறிவு

இராசிபலன்

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | ஓய்வு |
| கடகம் | மறதி |
| சிம்மம் | சினம் |
| கன்னி | உற்சாகம் |
| துலாம் | நிறைவு |
| விருச்சி | செலவு |
| தனுசு | பகை |
| மகரம் | நன்மை |
| கும்பம் | பெருமை |
| மீனம் | லாபம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சி போட்டிக்கு கடையநல்லூர் அரசு பள்ளி மாணவர்கள் தேர்வு



கடையநல்லூர், ஜன. 24–

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மத்திய கலாச்சார அமைச்சகம் மற்றும் விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகமும் இணைந்து பள்ளி மாணவர்களுக்கிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் புதிய ஆக்கம் தரும் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு வழிகோலவும், அறிவியல் கண்காட்சி 27.12.2023 அன்று தென்காசி மாவட்ட அளவில் ஐ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

மாவட்ட அளவில் பல பள்ளிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டு புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தி இருந்தனர். இதில் கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர் சுதர்சன் தனிநபர் போட்டியில் முதலிடமும் குழுவகை போட்டியில், மாணவர்கள் ஜெயக்குமார், அரவிந்தாக்ஷன் ஆகியோர் முதலிடமும் பெற்று கடலூரில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் பங்கெடுத்தனர்.

கடலூரில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கெடுத்தனர். இதில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர் குழுவினர் காட்சிப்படுத்திய கடல் நீரில் கச்சா எண்ணெய் கலந்தால் எளிய முறையில் பிரித்தெடுக்கும் கண்டுபிடிப்பு அனைவரின் பாராட்டுதலை பெற்று மாநில அளவில் தலைசிறந்த 10 கண்டுபிடிப்புகளில் ஐந்தாம் இடத்தைபிடித்தது. அடுத்து விஜயவாடாவில் நடைபெறும் தென்னிந்திய அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றது. பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவர்கள் ஜெயக்குமார் மற்றும் அரவிந்தாக்ஷன் ஆகியோரையும், மாணவர்களுக்கு வழிகாட்டிய அறிவியல் ஆசிரியை சௌ. புதுமைராஜாத்தி அவர்களையும் பள்ளி தலைமை ஆசிரியர் ச.ராஜகோபால், ஆசிரியர்கள் ராஜன், பாலச்சந்தர், திவான்மசூது மற்றும் அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் பள்ளி மேலாண்மை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களும் பாராட்டினர்.

## ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேதாஜி பிறந்தநாள் நாள் கொண்டாட்டம்



ஆவுடையார்கோவில், ஜன. 24–

ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்தநாள் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

பள்ளி சுவரில் வரையப்பட்டுள்ள சுபாஷ் சந்திர போஸ் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து வணங்கி மரியாதை செய்யப்பட்டது. முதுகலை வரலாற்று ஆசிரியர் மதியழகன் நேதாஜி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், இந்திய சுதந்திர போராட்டத்தில் நேதாஜி ஆற்றிய பங்களிப்பையும் எடுத்துரைத்தார். மேலும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் ஆறு முதல் எட்டு வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவிற்காக தட்டும், குவளை வழங்கப்பட்டது. இதனை ஆவுடையார்கோவில் ஒன்றிய சத்துணவு ஆணையர் சீனிவாசன் வழங்கிக் தந்தார்கள்.

இந்நிகழ்விற்கு பள்ளி தலைமையாசிரியர் தாமரைச்செல்வன் தலைமை தாங்கினார். உதவித் தலைமை ஆசிரியர் ஸ்டாலின், தமிழாசிரியர் குமார், கந்தவேல், முருகேசன், திருவருட்செல்வன், ஆசிரியைகள் பத்மாவதி, புவனேஸ்வரி, குருப்ஸ்கயா, நித்யா உள்ளிட்ட அனைத்து ஆசிரியப் பெருமக்களும், ஆவுடையார்கோவில் ஒன்றிய சத்துணவு மேலாளர் செல்வராஜ், பள்ளி சத்துணவு அமைப்பாளர் பாலசுப்ரமணியன் உள்ளிட்டோரும் மற்றும் அனைத்து மாணவச்செல்வங்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருநெல்வேலி மாவட்டம், பணகுடியில் அருள்மிகு ஸ்ரீ ராமலிங்க சுவாமி உடனுரை சிவகாமி அம்பாள், ஸ்ரீ நம்பி சிங்கப்பெருமாள் திருக்கோவில் தைப்பூச திருவிழா நடைபெற்றது. 10- நாள் திருவிழாவில் 7-ம் திருவிழா சைவப் பிள்ளைமார் திருவிழாவில் நடராஜர் சபாபதி மண்டபத்திற்கு எழுந்தருளல், பல்லக்கில் சுவாமி, அம்பாள் வீதி உலா, சிறப்பு தீப ஆராதனை போன்ற நிகழ்ச்சிகள் சைவப் பிள்ளைமார் சமூகத்தினரின் ஏற்பாட்டில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வ.உ.சி. இளைஞர் பேரவை மாவட்டச் செயலாளர் மு.சங்கர், டி.ராஜா, எல்.சுரேஷ், பரமசிவன், ஆறுமுகம், சுந்தர், ராஜன், ஐயப்பன், என். குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் சிந்து சுப்பிரமணியன் பரதநாட்டிய குழுவினர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## திருமயத்தில் மத்திய பிஜேபி அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



**திருமயம் : ஜன. 24, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் கடை வீதியில் மத்திய பிஜேபி அரசை கண்டித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தெற்கு மாவட்ட தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இராம சுப்புராம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் பா சிதம்பரம் கலந்து கொண்டார். மேலும் தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பேசும்போது ராகுல் காந்தியின் நடை பயணத்தில் பிஜேபி தொண்டர்கள் நடத்திய அடக்கு முறையையும் அதை கண்டுகொள்ளாத அசாம் மாநில அரசையும், மத்திய பிஜேபி அரசையும் வன்மையாக கண்டித்து கோஷங்களை எழுப்பி பேசினார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அழகிரி வேண்டுகோளின் படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மாநில சிறுபான்மை பிரிவு எஸ்எல்எஸ்.அக்பரலி, வடக்கு வட்டாரத் தலைவர் எம். முருகேசன், தெற்கு வட்டார தலைவர் ராம மணிகண்டன், மாவட்ட கலைப்பிரிவு தலைவர் மயில்வாகனன், மாநில எஸ்சி எஸ்டி பிரிவு பெருமாள், மாநில செயற்குழு உறுப்பினர் முருகானந்தம், மாவட்ட மகிலா காங்கிரஸ் தலைவி சிவந்தி நடராஜன் மற்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் நகரத் தலைவர் அன்பு மற்றும் மாவட்ட வட்டார நகர காங்கிரஸ் தலைவர்கள், கிராம காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், இளைஞர் காங்கிரஸ், மகளிர் காங்கிரஸ் வட்டாரத் தலைவி பழனி முத்துப்பாண்டி, வடக்கு வட்டார தலைவி ராமு சதீஷ்குமார், நகரத் தலைவி அமராவதி, ஆலங்குடி, அரிமளம், பொன்னமராவதி வட்டார நிர்வாகிகள், ஓபிசி பிரிவு, எஸ்சி எஸ்டி பிரிவு, கலைப்பிரிவு, சோசியல் மீடியா பிரிவு, வர்த்தக பிரிவு, விவசாய பிரிவு உள்ளிட்ட அனைத்து பிரிவு தலைவர்கள், நிர்வாகிகள், துணைநிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் வட்டார காங்கிரஸ் தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் நன்றி கூறினார்.

## சங்கரன்பந்தல் மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் பூம்புகார் எம்எல்ஏ நிவேதா முருகன் வழங்கினார்



தரங்கம்பாடி, ஜன.24–

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஆமாமா ஒன்றியத்துக்கு உட்பட்ட சங்கரன் பந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் லெனின் மேசாக், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஷகிலா அஜிஸ், தேவிகா வேந்தன் பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் அஜிஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் பா. சித்ரா வரவேற்றார்.

இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு 155 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் பெண்களின் முன்னேற்றத்திற்கு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் பள்ளி படிப்பை முடித்த மாணவிகள், எந்த தடையும் இன்றி கல்லூரி படிப்பை தொடங்கிடும் வகையில் மாதம் ரூ.1000–ம் வழங்கி வருகிறார். இது போன்று பெண்களின் வளர்ச்சிக்கு முதலமைச்சர் அயராது பாடுபட்டு வருகிறார். பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் நடப்பாண்டு பொதுத் தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்கு எனது சொந்த செலவில் பேனா வழங்க உள்ளேன். அதனைப் பெற்று தேர்வு எழுதி அனைத்து மாணவ–மாணவிகளும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். என்றார்.

விழாவில் ஒன்றிய செயலாளர் எம்.அப்துல் மாலிக், பள்ளி மேலாண்மை குழு தலைவர் அஜிஸ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் உதயசங்கர், செம்பை தெற்கு ஒன்றிய திமுக தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரஹமத்துல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.

## கந்தர்வகோட்டைக்கு செல்லும் சாலையை சீரமைக்க தமாகா விவசாய அணி கோரிக்கை



கறம்பக்குடி : ஜன. 24, புதுக்கோட்டை மாவட்டம், துவார் கிராமத்திலிருந்து கருப்பட்டிபட்டி வழியாக செல்லும் கந்தர்வகோட்டை சாலை சுமார் 2 கிலோ மீட்டர் அளவுக்கு மிகவும் மோசமாக பயணிக்க முடியாத அளவுக்கு உள்ளது.

இந்த சாலையில் இரவு நேரங்களில் இரு சக்கர வாகனங்களில் பயணிப்பவர்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி விபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இந்த சாலை வழியாகதான் துவார் கிராம மக்கள் கந்தர்வகோட்டை தாலுகா அலுவலகம் மற்றும் ஒன்றிய அலுவலகத்திற்க்கு செல்லும் நிலையிலும் கருப்பட்டிபட்டி ஆயிபட்டி இந்திராநகர், காந்திநகர் பொதுமக்களும் துவார் கிராமத்தை வந்தடைந்து மருத்துவ சிகிச்சை மற்றும் பிற நிகழ்சிகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. அவசர மருத்துவ உதவிக்கும் செல்ல சாலை பள்ளமும், படுகுழியுமாக இருப்பதால் பொது மக்கள் மிகுந்த சிறமத்திற்க்கு ஆளாகின்றனர். விவசாயிகளுக்கும் இந்த சாலை மிகவும் முக்கியமாக இருப்பதால் மாவட்ட நிர்வாகம் மிகவும் முக்கியமான இந்த சாலையை உடனடியாக செப்பனிட்டு பொதுமக்களின் சிரமத்தை போக்கிட வேண்டும் என தமாகா விவசாயஅணி மாநில தலைவர் துவார் சி.ரெங்கராஜன் கோரிக்கை வைத்துள்ளார்.

## "அயோத்தி திரேதா யுகத்துக்கு திரும்பியதுபோல் உள்ளது" ராமர் கோயில் தலைமை அர்ச்சகர் ஆச்சாரிய சத்யேந்திர தாஸ் நெகிழ்ச்சி



அயோத்தி : ஜன. 24, அயோத்தி, திரேதா யுகத்துக்கு திரும்பியதுபோல் உள்ளது என்று ராமர் கோயில் தலைமை அர்ச்சகர் ஆச்சாரிய சத்யேந்திர தாஸ் நெகழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

அயோத்தி ராமர் கோயில் நேற்று முதல் பொதுமக்களுக்கு திறக்கப்பட்ட நிலையில், குழந்தை ராமரை தரிசிக்க லட்சக்கணக்கான பக்தர்கள் அயோத்திக்கு வந்துள்ளனர். ஜெய் ஸ்ரீ ராம் உள்பட பல்வேறு விதமான ராம கோஷங்களையும் பக்திப் பாடல்களையும் பாடியவாறு பக்தர் கூட்டம் அயோத்தியை முற்றுகையிட்டுள்ளது. நகர் முழுவதும் காவிக்கொடியுடன் பக்தர்கள் காணப்படுகின்றனர். ஏராளமான பக்தர்கள் அயோத்தியை நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். அயோத்தியில் ஏற்பட்டுள்ள பக்தி எழுச்சி குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ராமர் கோயில் தலைமை அர்ச்சகர் ஆச்சாரிய சத்யேந்திர தாஸ், "குழந்தை ராமரை தரிசிக்க ஏராளமான பக்தர்கள் வந்துள்ளனர். ராமர் வாழ்ந்த திரேதா யுகத்துக்கு அயோத்தி திரும்பியதைப் போல உள்ளது.

பிராண பிரதிஷ்டைக்குப் பிறகு அயோத்தி நகரமே தூய்மை அடைந்துள்ளது. திரேதா யுகத்தில் வனவாசம் முடிந்து ராமர் அயோத்தி திரும்பியபோது நகர மக்கள் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர். அதுபோன்ற ஒரு தருணத்தை பார்க்க முடிகிறது. ஜெய் ஸ்ரீ ராம் கோஷம் எதிரெலிக்க ஏராளமான பக்தர்கள் அயோத்திக்கு வந்த வண்ணம் உள்ளனர். இது திரேதா யுகத்துக்கு அயோத்தி திரும்பிவிட்டதைப் போல தெரிகிறது. பக்தர்கள் கூட்டம் அதிகம் இருப்பதால், அனைவருக்குமே இன்று (ஜன. 23) தரிசனம் கிடைக்காது. இன்றும் இதேபோன்ற கூட்டம் இருக்கும். இன்னும் சில நாட்களுக்கு கூட்டம் அதிகமாத்தான் இருக்கும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துறவிகள் அயோத்தி வந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களோடு குறைந்தபட்சம் 4 பேரையாவது அழைத்து வருகிறார்கள். இதன் காரணமாகவே கூட்டம் அதிகமாக உள்ளது. ஒவ்வொருவரும் அன்பாக பழகவேண்டும். அயோத்தியில் இருந்துமாற்றம் நாடு முழுவதும் பரவும். இது மிக அழகாக இருக்கும். ஒவ்வொருவரும் இணக்கத்தோடு வாழ வேண்டும். நல்லெண்ணத்தோடு நாம் வாழ வேண்டும். பகவான் ராமரின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்" என தெரிவித்தார். பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ள நிலையில், அவர்களை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் காவல்துறையினரோடு, அதிரடி காவல் படை, எல்லைப் பாதுகாப்புப் படையான சஷாத்ரா சீமா பால் ஆகியவை களத்தில் உள்ளன.

### சங்கரன்கோவிலில் ரூ.11.33 கோடி மதிப்பில் கட்டப்பட்ட

## அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சங்கரன்கோவில், ஜன. 24–**

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் ரூ.11.33 கோடி மதிப்பில் கட்டப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு தென்காசி கலெக்டர் துரை ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, தனுஷ் குமார் எம்பி முன்னிலை வகித்தனர். இந்தக் கட்டிடத்தில் அலுவலக அறை, முகப்பு, கூடம், முதல்வர் அறை, மாணவர்கள் கூட்டுறவு அங்காடி, சுகாதார மையம், வகுப்பறைகள், துறைத்தலைவர்கள் அறை, நூலகம் மற்றும் நூலகர் அறை, பணியாளர்கள் அறை, ஆண் பெண் மற்றும் இருபாலருக்குமான மற்றும் சாய்வுதள வசதிகளுடன் கூடிய மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறை, ஆய்வுக்கூடங்கள், கணிணி ஆய்வுக்கூடம். பணியாளர்கள் அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த கட்டிடம் பொதுப்பணித்துறை, திருநெல்வேலி தொழில்நுட்ப கல்வி கோட்டத்தின் வாயிலாகக் கட்டப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டிடத்தை திறந்து வைத்த முதலமைச்சருக்கு ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துள்ளனர்.

நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமாமகேஸ்வரி, சங்கரன்கோவில் யூனியன் துணைத் தலைவர் செல்வி, களப்பாகுளம் பஞ்சாயத்து தலைவர் சிவசங்கரி, சங்கரன்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் விக்டோரியா தங்கம், திருநெல்வேலி மண்டல கல்லூரி கல்வி இணைஇயக்குநர் பாஸ்கரன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் நல்லசிவம், உதவி பொறியாளர் காளீஸ்வரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இளவரசி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் மற்றும் திமுக வடக்கு மாவட்ட பொருளாளர் சரவணன், நகர செயலாளர் பிரகாஷ், மாணவரணி உதயகுமார், இளைஞர் அணி சரவணன், நகராட்சி கவுன்சிலர்கள் புனிதா, விஜய்குமார், செல்வராஜ் மற்றும் ஜெயக்குமார், செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



**தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஜவஹர்லால் நடுநிலைப் பள்ளியில் மத்திய அரசின் தேசிய திறனாய்வு மாதிரி தேர்வு, மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை மற்றும் அக்ஷய பாத்திரம் அறக்கட்டளை மூலம் நடைப்பெற்றது. இதில் வட்டார கல்வி அலுவலர் மாரியப்பன் தலைமை வகித்தார். மருதம் பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் கற்பகராஜா முன்னிலை வகித்தார். மருதம் பயிற்சி மைய ஆசிரியர் கிருஷ்ணகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். பட்டதாரி ஆசிரியர்கள் இலட்சுமி, மாரியப்பன், நவீன் குமார், தமிழ்நாடு அறிவியல் இயக்க தலைவர் சிவஞான பாண்டியன் கலந்து கொண்டனர். இந்த தேர்வினை 150–க்கும் மேற்பட்டோர் எழுதினார்கள். அக்ஷயப்பாத்திர அறக்கட்டளை இராம் நன்றியுரை கூறினார்.**

## கீரமங்கலத்தில் விவசாய தொழிலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்




ஆலங்குடி : ஜன. 24, புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கீரமங்கலம் பேருந்து நிலையம் அருகே அச்சங்கத்தின் ஒன்றியச் செயலர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், பயனில்லாத உழவர் பாதுகாப்புத் திட்டத்தை கைவிட்டு, கலைஞர் வழங்கிய விவசாய தொழிலாளர் நல வாரித்தை அமைக்க வேண்டும். பல வருடங்களாக அரசு நிலங்களில் வீடு கட்டி வசித்துவரும் நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். 100 நாள் வேலைத் திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய ஊதியத் தொகையை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும். பேரூராட்சி பகுதியில் நிறுத்தப்பட்ட 100 நாள் வேலையை மீண்டும் வழங்க வேண்டும். கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காத பொதுமக்களுக்கு உடனே கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் இந்திய விவசாயிகள் சங்க உறுப்பினர் மு.மாதவன், சங்கத்தின் ஒன்றியத் தலைவர் மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

# குமரப்பேட்டை கோவில்களில் சிறப்பு பூஜைகள் திருவிதி உலா–அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஜன24–


உத்தரப்பிரதேசம் மாநிலம்,அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் ராமர் கோவில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க இக்கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டம்,எல்லாபுரம் ஒன்றியம், குமரப்பேட்டை ஊராட்சியில் பெருமாள் கோவில் தெருவில் உள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் ராமர்,சீதாவிற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. உற்சவர்களுக்கு பால்,தயிர், தேன்,சந்தனம்,மஞ்சள்,ஜவ்வாது,இளநீர்,பன்னீர் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதை முன்னிட்டு ஆலய வளாகம் முழுவதும் கொடி தோரணங்களாலும்,வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பின்னர்,மங்கள வாத்தியம் இசைக்க பூக்களாலும்,மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட உற்சவர் அனுமன் வாகனத்தில் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதேபோன்று பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வரதராஜ சுவாமி திருக்கோவிலில் சிறப்பு பூஜைகள்,சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.பின்னர், உற்சவருக்கு பாராட்டு விழா எனப்படும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் குமரப்பேட்டை, பெரியபாளையம்,கே.ஆர் கண்டிகை உள்ளிட்ட சுற்று வட்டாரத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர், கோவிலுக்கு வந்திருந்த 6,000–க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு ஆலயத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழா குழுவினர்களும்,கிராம பொதுமக்களும்,பக்தர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியதால் 2 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்





ஊத்துக்கோட்டை, ஜன24–

சிறுவாபுரிபாலசுப்பிரமணிய சுவாமிதிருக்கோவிலில்பக்தர்கள் கூட்டம் அலைமோதியதால் நீண்ட வரிசையில் 2 மணிநேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.இக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வாரங்கள் செவ்வாய்க்கிழமைகளில் வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வீடு,நிலம்,வேலை வாய்ப்பு, திருமணம், பிள்ளைபேரு உள்ளிட்ட வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

இந்நிலையில், நேற்று முருகனுக்கு உகந்த தினமான செவ்வாய்க்கிழமையாகும். மேலும், பிரதோஷம் என்பதால் இங்கு உள்ள ஈஸ்வரன் கோவிலுக்கு சென்று விட்டு கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்தனர்.நேன்று விடியற்காலை முதலே அதிக அளவு பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. சென்னை,காஞ்சிபுரம், திருவள்ளூர்,செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும்,ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமானபக்தர்கள்கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தனர்.

இதனால் பக்தர்களின் கூட்டம் இக்கோவிலில் அலைமோதியது.பொது தரிசனம்,ரூ.50 மற்றும்,ரூ.100 உள்ளிட்ட கட்டண தரிசன வரிசையில் சுமார் 2 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.இதனால் முதியவர்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் மிகவும் அவதிக்கு உள்ளானார்கள். பக்தர்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல் வந்ததால் சிறுவாபுரி-புதுரோடு சாலையிலும்,சிறுவாபுரி-அகரம் சாலையிலும் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

மேலும், சாலையின் இருபுறமும் வியாபாரிகள் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்திருந்ததால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டது.இதனால் பெரியபாளையத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் தடம் எண்:547 கோவில் வரையில் வந்துவிட்டு மீண்டும் அகரம் புதுவையில் வழியாக மாற்று பாதையில்செங்குன்றம்சென்றது. எனவே,மாவட்ட கலெக்டர்,இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள்,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்யவும்,போதிய அளவுகுடிநீர், கழிவறை வசதி,பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களை மேற்கொள்ள போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்களும்,பக்தர்களும்கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீர்காழி அருகே எடமணல் கிராமத்தில் நெல் சேமிப்பு தளங்கள் முதல்வர் திறந்து வைத்தார்





சீர்காழி, ஜன. 24–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த எடமணல் கிராமத்தில்தமிழ்நாடுநுகர்பொருள் வாணிப கழக நெல் சேமிப்பு கிடங்கு இயங்கி வருகிறது. இந்த சேமிப்பு கிடங்கில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் முட்டைகளை திறந்தவெளியில் அடுக்கி வைத்து வந்த நிலையில் கடந்த ஆண்டு ரூபாய் 31.25 கோடி மதிப்பீட்டில் 25,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்களை அமைக்க தமிழக அரசு நிதி ஒதுக்கியது.

இந்நிலையில்முதற்கட்டமாக 9 சேமிப்பு தளங்கள் ரூபாய் 9.43 கோடிமதிப்பீட்டில்கடந்த ஆண்டு திறக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ரூபாய் 21.81 கோடி மதிப்பீட்டில் 16 நவீன நெல் சேமிப்பு தளங்களைதமிழகமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளிகாட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

எடமணல் நுகர் பொருள் வாணிப கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மாவட்ட செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா.எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம் .பன்னீர்செல்வம், மற்றும் நுகர் பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் திருப்பதி, செயற்பொறியாளர் குணசீலன், உதவி செயற்பொறியாளர் இளங்கோ, உதவி செயற்பொறியாளர் (கட்டுமானம்) ஆனந்தகுமார், உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பைங்குழலி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். விழாவில் விவசாயிகள்மற்றும்பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரியபாளையம் கோவிலில் நாள் முழுதும் அன்னதானம் திட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்





ஊத்துக்கோட்டை, ஜன24–

திருகோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், கோயமுத்தூர் மாவட்டம் என மூன்று மாவட்டங்களில் காணொளி காட்சி மூலம் துவக்கி வைத்தார்.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் உள்ள அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை காணொளி காட்சி மூலம் துவக்கி வைத்தார்.இதனை அடுத்து கோவில் வளாகத்தில் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டாக்டர் த.பிரபுசங்கர் திட்டத்தை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி துவக்கி வைத்தார்.


இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை வேலூர் இணை ஆணையர் விஜயா,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும்,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான டி.ஜே. கோவிந்தராஜன், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி, எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் பி.ஜெ. மூர்த்தி நிர்வாகிகள் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர்கள் சீனிவாசன், முனுசாமி,வடமதுரை அப்புன், ஊத்துக்கோட்டை தாசில்தார் வாசுதேவன்,திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர் அஞ்சல் லோக மித்ரா கோவிலின் செயல் அலுவலர் பிரகாஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ வேலூர் மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள காயிதேமில்லத் கூட்டரங்கில் நடைபெற்றது. இதனை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் குமாரவேல் பாண்டியன், குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இக்கூட்டத்தில் இணை இயக்குநர் (மருத்துவ பணிகள் ) பாலசந்தர், துணை இயக்குநர்கள் பானுமதி (சுகாதார பணிகள்), மணிமேகலை (குடும்ப நலம்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.



▶ இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரியின் உத்தரவின் பேரில் நேற்று பெருந்தலைவர் காமராஜர் வளாகத்தில் செக்டார்கள், உதவி செக்டார்கள், போலிஸ் செக்டார்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இப்பயிற்சி வகுப்பினை காரைக்கால் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான குலோத்துங்கன் துவக்கி வைத்து பேசுகையில் இந்த பயிற்சி வகுப்பினை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் தேர்தல் நேரத்தில் உங்களுக்கு இது பயனுள்ளதாக அமையும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பதட்டமான வாக்கு சாவடிகள் சம்பந்தமான தேர்வு செய்யும் முறை பற்றியும் பயிற்சியாளர் மோகன் விரிவுரையாளர் பஜன்கோ அவர்களால் நடத்தப்பட்டது. இதில் துணை மாவட்ட ஆட்சியர்களான ஜான்சன், செந்தில்நாதன் மற்றும் குடிமை பொருள் வழங்கல் துறையின் துணை இயக்குநர் சச்சிதானந்தம் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் திரு.பாஸ்கர் மற்றும் வித்யாதரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



▶ வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருவொற்றியூர் பகுதியில் சிபிசிஎல் நிறுவனத்தின் சி எஸ் ஆர் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளை மேம்படுத்த பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் அடிக்கல் நாட்டினார் ஜெய கோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளி, கன்னியா குருகுலம் பள்ளி உயர்நிலைப்பள்ளி, பூந்தொட்ட நடுநிலை பள்ளி, கத்திவாக்கம் நடுநிலைப்பள்ளி,ஆகிய பள்ளியில் சிசிடிவி கேமரா , ஸ்மார்ட் கிளாஸ் மற்றும் சுற்றுச்சுவர் உயர்த்துல் புதுப்பித்தல் உள்ளிட்ட கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டன ஒரு கோடியே 99 லட்ச ரூபாய் செலவில் நடைபெறும் திட்ட பணிகளை வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர். கலாநிதி வீராசாமி, அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார் நிகழ்ச்சியில் திருவொற்றியூர் 1வது மண்டல குழு தலைவர், தி.மு. தனியரசு மேற்கு பகுதி செயலாளர் வை.மா. அருள்தாசன் மாமன்ற உறுப்பினர்கள் சொக்கலிங்கம் சுசீலா ராஜா, வட்ட செயலாளர் கேபிள் டி.வி ராஜா, பால உமாபதி மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்

கடலில் பெட்ரோல் டேங்க் வெடித்து படகு சேதம்

# பாதிக்கப்பட்ட மீனவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய முன்னாள் எம்.எல்.ஏ பவுன்ராஜ்



*சீர்காழி, ஜன. 24–*

*மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழிஅருகே திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தபாபு என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த வாரம் மீன் பிடிக்க சென்ற அதே கிராமத்தைச் சேர்ந்த அகோரமூர்த்தி, தர்மராஜ், பார்த்திபன், ஜீவானந்தம், சித்திரவேலு உள்ளிட்ட ஆறு பேரும் கடற்கரையில் இருந்து சுமார் 20 நாட்டிகல் தூரம் நடுக்கடலில் நள்ளிரவு மீன் பிடித்து கொண்டிருந்த போது பைபர் படகின் பெட்ரோல் டேங்க் வெடித்து சிதறி படகு தீ பற்றி எரிய தொடங்கியது.*

*படகில் இருந்த ஆறு பேரும் தீக்காயங்களுடன் கடலில் குதித்து போராடிய நிலையில் மற்ற மீனவர்கள் அவர்களை காப்பாற்றி கரை சேர்த்தனர். படகு முற்றிலும் எரிந்து சேதமடைந்தது. படகின் மதிப்பு சுமார் 10 லட்சம் ஆகும், காயமடைந்த அனைவரும் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் எஸ். பவுன்ராஜ் பாதிக்கப்பட்ட மீனவர்களையும், தீப்பிடித்து எரிந்த படகையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி ரூ 25 ஆயிரம் ரொக்க பணம் வழங்கினார்.*

*அப்பொழுது முன்னால் சட்டமன்ற உறுப்பினர் பி.வி.பாரதி, ஒன்றிய செயலாளர் நற்குணன், மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் பரிமளா தமிழ்செல்வன், மற்றும் மீவை பஞ்சாயத்தார் உடன் இருந்தனர்.*

அயோத்தியில் ஸ்ரீ சீதாராமர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

# ஆரணியில் திருக்கல்யாணம்–சுவாமி திருவிதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஜன24–

அயோத்தியில் ஸ்ரீ சீதாராமர் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இந்திய பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வரலாற்றுசிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியால் அயோத்திநகரமே விழா கோலம் பூண்டிருந்தது. எனவே, இந்துக்கள் இதனை கொண்டாடும் வகையில் தாங்கள்வசித்துவரும்பகுதியில் உள்ள கோவில்களில் சிறப்பு பூஜைகள்,திருக்கல்யாண உற்சவங்கள் உள்ளிட்டவைகளை நடத்தினர்.

மேலும்,அன்று மாலை இந்துக்கள் தங்களது வீடுகளில் திருக்கார்த்திகை தீபத்தை போன்று வீட்டு வாசலில் கோலமிட்டு குறைந்தது ஐந்து விளக்குகள் ஏற்றி வழிப்படனர். இந்நிலையில்,திருவள்ளூர் மாவட்டம்,சோழவரம் ஒன்றியம்,ஆரணி கும்மடம் வீதியில் உள்ள ஸ்ரீ ராமபிரான் திருக்கோவிலில் ஸ்ரீ சீதா ராம திருக்கல்யாண உற்சவம் செய்து கும்பாபிஷேக விழாவை கொண்டாடினர். எனவே,அன்று காலை 4 மணிக்கு மேல் 5 மணிக்குள் பந்தக்கால் நிகழ்ச்சி நடைபெற்றது.இதன்பின்னர்,கோ பூஜையும், பின்னர் கணபதி ஹோமத்துடன் திருக்கல்யாண உற்சவமும் துவங்கியது.

மாலை ஆரணி பஜார் வீதியில் உள்ள காணியம்மன் திருக்கோவில் இருந்து ஸ்ரீ ராமபிரான் திருக்கோவிலுக்கு பக்தர்கள் சீர்வரிசை கொண்டுவரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதன் பின்னர், ஸ்ரீஜனகமகாராஜா-சுனயனாவின் திவ்ய குமாரத்தி ஸ்ரீ சீதா தேவிக்கும், ஸ்ரீதசரத மகாராஜா–கௌசல்யா தேவியின் குமாரன் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது. இதை முன்னிட்டு கோவில் அருகே பரதநாட்டியம்,சிலம்பம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர், பஜனை, கண்ணைக் கவரும் வான வேடிக்கை, மங்கள வாத்தியம், செண்டை மேளம் இசைக்க முக்கிய வீதிகளின் வழியாக சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சிநடைபெற்றது.அனைத்து பக்தர்களுக்கும் காலை உணவும், மதியம் மாபெரும் அன்னதான நிகழ்ச்சியும் கோவில் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆரணி ஸ்ரீ ராம பக்த பேரவை சார்பில் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்து இருந்தனர். இந்நிகழ்ச்சியில், ஆரணி சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் மாவட்டம் புதுத்துறை பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு



காரைக்கால், ஜன,24

காரைக்கால் மாவட்டம் புதுத்துறை கரிம்நகர் பகுதியில் புதிதாக அமைய உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அப்பகுதி மக்கள் குடியிருப்பு பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைவதால் அப்பகுதி துர்நாற்றம் மிகுந்ததாக மாறும் எனவும் பல்வேறு விஷ வாயுக்கள் வெளிவந்தால் மக்களுக்கு சுவாச கோளாறு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அச்சம் தெரிவித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை குடியிருப்பு பகுதி இல்லாத இடத்திற்கு மாற்ற கோரி கையெழுத்தியக்கம் நடத்தி அதனை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்க முடிவு செய்தனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்தில் கூடிய அப்பகுதி மக்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமைவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கலந்துரையாடினர். அதனைத் தொடர்ந்து அங்கு வந்திருந்த அனைவரும் கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு இதனை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்தனர்.

திடீரென புதுத்துறை கரிம்நகர் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கூடியதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் குடியிருக்கும் இடத்தில் அமைய உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை குடியிருப்புகள் இல்லாத இடத்திற்கு மாற்ற அப்பகுதி மக்கள் புதுச்சேரி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காட்டுமன்னார்கோவில் எம்.ஜி.ஆர்., அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் மாவட்ட வேலை வாய்ப்பு விழிப்புணர்வு பயிற்சி



காட்டுமன்னாரகோயில் ஜன. 24–

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அரசு கலை மற்றும் கல்லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வெறி வழிகாட்டு மையம் சார்பில் டிஎன்பிசி தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு நடந்து வருகிறது.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆறுமுக வெங்கடேஷ் தலைமையில், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் வெங்கடராஜன், இளைநிலை உதவியாளர் அருண்ராஜ் ஆகியோர் கல்லூரியில் நடைபெறும் பயிற்சி வகுப்பை ஆய்வு செய்தனர். தொடர்ந்து, தொழில் நெறி வழிகாட்டுதல் குறித்தும், மத்திய அரசின் 'அக்னிபாத் வாயு' பணி தொடர்பான, மாணவர்களுக்கான விழிப்புணர்வு கூட்டத்தில் பங்கேற்று பேசினர். கூட்டத்திற்கு முதல்வர் மீனா தலைமை தாங்கினார். கல்லூரியின் வேலை வாய்ப்பு அலுவலர் சரவணன் வரவற்றார். பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். கவுரவ விரிவுரையாளர் இளையராஜா நன்றி கூறினார்.

# காளகஸ்திநாதபுரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு





தரங்கம்பாடி, ஜன. 24–

மயிலாடுதுறை மாவட்டத்தில்நிகழாண்டு 1,70,000 ஏக்கர் நிலப்பரப்பில் சம்பா, தாளடி பயிரிடப்பட்டுள்ளது. கடந்த 15 நாட்களுக்கு மேலாக சம்பா அறுவடை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மாவட்டத்தில் முதற்கட்டமாக 60 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, காளகஸ்திநாதபுரம் ஊராட்சியில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சம்பா பருவ கொள்முதல் துவக்கவிழா நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் ஆகியோர் கலந்து கொண்டு முதல் கொள்முதல் நிலையத்தை தொடங்கி வைத்தனர்.

தொடர்ந்து விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் திருப்பதி, வேளாண் இணை இயக்குனர் சேகர்,, மாவட்ட கூட்டுறவு தலைவரும் மாவட்ட திமுக துணைச் செயலாளருமான மு.ஞானவேலன், தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், செம்பனார்கோவில் ஒன்றிய குழு துணை தலைவர் மைனர் பாஸ்கர், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், செம்பனார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, மஞ்சுளா. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சரவணன் மற்றும் விவசாயிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மயிலாடுதுறையில் 13, குத்தாலத்தில் 20, தரங்கம்பாடியில் 12, சீர்காழியில் 15 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தெரிவித்துள்ளார்.

# தென்காசியில் மதிமுக சார்பில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்



தென்காசி : ஜன. 24, தென்காசி மாவட்ட மதிமுக சார்பில் தென்காசியில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் ஜன. 25ல் நடைபெற உள்ளது.

தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக செயலாளர் இராம. உதயசூரியன் தலைமை தாங்குகிறார். வாசு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தி.சதன் திருமலை குமார், தென்காசி வடக்கு மாவட்ட மதிமுக செயலாளர் சுதா. இல.பாலசுப்பிரமணியன், தென்காசி வடக்கு மாவட்ட மதிமுக அவைத்தலைவர் செல்வசுத்தி வடிவேல், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பா.பாலகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக அவை தலைவர் என். வெங்கடேஸ்வரன் வரவேற்புப் பேசுகிறார். மாவட்ட துணைச் செயலாளர் சுரண்டை எஸ்.கே.டி. துரைமுருகன், தென்காசி கிழக்கு ஒன்றிய மதிமுக செயலாளர் சு.மாரிச்செல்வம் ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்கள்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் மதிமுக மாநில துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் தி.மு. இராசேந்திரன், மதிமுக மாநில இலக்கிய அணி செயலாளர் காரை செல்வராஜ், ஆகியோர் கலந்துகொண்டு மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில் சிறப்புரை ஆற்றுகிறார்கள். இந்த நிகழ்ச்சியில் மதிமுக தலைமை தணிக்கை குழு உறுப்பினர் சுரண்டை இராமகிருஷ்ணன், மாநில மருத்துவர் அணி செயலாளர் வி.எஸ்.சுப்பாராஜ், மாநில சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் காசிராஜன், குருவி குளம் ஒன்றிய குழுபெருந்தலைவர் கே. விஜயலட்சுமி, மாவட்ட கவுன்சிலர் ஆர்.தேவி இராசகோபால், மாநில தீர்மான குழு உறுப்பினர் எஸ். சுந்தர்ராஜன், மதிமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.ஆர்.எம் வேதநாயகம், விவேகானந்தன், வராகனூர் காளிராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் செக்.மோகன்தாஸ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சு.இசக்கியப்பன் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் துரை. மோகன்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.



திருவரங்குளம் பெரியநாயகி அம்பாள் உடன் உரை அரங்குலநாதர் கோவிலில் தை மாத பிரதோஷ விழாவை முன்னிட்டு சிவன் சன்னதியில் உள்ள நந்தி பகவானுக்கு பால், தயிர், சந்தனம் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. மூலஸ்தானத்தில் உள்ள சுயம்புலிங்க சிவபெருமான் பெரியநாயகி அம்பாளுக்கு தீபாராதனை நடைபெற்று. சிவபெருமான் காளை வாகனத்தின் எழுந்தருள செய்து பக்தர்கள் சிவசிவ கரகோஷத்தில் மூன்று முறை கோவில் பிரகாரத்தை சுற்றி வந்தனர். சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க நந்தி பகவானுக்கு மகா தீபம் காட்டினர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 128 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மதுரை நேதாஜி சாலையில் உள்ள, நேதாஜி சுபாஷ் சேனை நிறுவனத் தலைவர் டாக்டர். விமகாராஜன் ஆணைக்கிணங்க மாநில செயலாளர் ம.சமன்தேவர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மதுரை மாவட்ட நிர்வாகிகள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் மருது தேசிய கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை கோவில்பட்டியில் இல்லம் தேடிக் கல்வி மையத்தில் பேச்சுப்போட்டி



கந்தரவகோட்டை : ஜன. 24-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், கோவில்பட்டியில் இல்லம் தேடி கல்வி மையத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு பேச்சுபோட்டி நடைபெற்றது.

இப் போட்டியை இல்லம் தேடிக் கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா தொடங்கி வைத்து பேசும் பொழுது, மாணவர்கள் பொது அறிவு புத்தகங்கள், திருக்குறள், வரலாறு, அரசியல், அறிவியல் நூல்களையும், பெரியார், காந்தி, நேரு, காமராசர், அண்ணா, உள்ளிட்ட தலைவர்கள் வாழ்க்கைவரலாற்றையும், இலக்கியம் தொல்லியல், தினசரி செய்தித்தாள், மாத இதழ்கள் வாசிக்க வேண்டும் எனவும், அவ்வாறு தொடர்ந்து வாசிப்பதால் எதிர்காலத்தில் சிறந்த மனிதராக உயர் முடியும் என்றும், அனைவரும் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், பள்ளிகளில் உள்ள நூலக புத்தகங்களை, நூல்களை வாசிக்க வேண்டும் எனவும் பேசினார்.

மாணவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், கொடிகாத்த குமரன், மகாத்மா காந்தி, பள்ளி தூய்மை உறுதிமொழி, வஉசி சிதம்பரனார், இந்தியாவின் பெருமை, தேசியக்கொடி உள்ளிட்ட தலைப்புகளில் சிறப்பாக பேசினார்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு குடியரசு தினத்தில் பரிசுகள் வழங்கப்படுகிறது. போட்டிக்கான ஏற்பாடுகளை தன்னார்வலர்கள் இலக்கியா, சிவகாமி கௌதமி ராதிகா உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை ஸ்ரீ பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவன் மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் வெண்கல பதக்கம் வென்றார்



புதுக்கோட்டை : ஜன. 24-

பாரதியார் தினம் மற்றும் குடியரசு தின மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டி ஜனவரி 9 முதல் 13 வரை தருமபுரி மாவட்டம் சப்தகிரி பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஸ்ரீ பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 17 வயதிற்குட்பட்டோர் பிரிவில் 10ம் வகுப்பு பயிலும் ஆ.ஹர்னிஸ் என்ற மாணவன் 66 கிலோ எடைப்பிரிவில் வெண்கல பதக்கம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். வெற்றி பெற்றதற்கான பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா அவர்களிடம் காண்பித்து வாழ்த்துக்களை பெற்றார்.

இந்நிகழ்வில் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் தங்கராசு, முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் முருகையன், பள்ளி தலைமையாசிரியர் இராஜேந்திரன், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், பள்ளித் துணை ஆய்வாளர் வேலுசாமி, உடற்கல்வி இயக்குநர் சண்முகநாதன், உடற்கல்வி ஆசிரியர் ஆறுமுகம் மற்றும் பள்ளி மேலாணமைக்குழு உறுப்பினர்கள் இராமு.அருணாசலம், ஆனந்தகுமரன் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுக்களை தெரிவித்தனர்.

# இந்தியா 2025-ல் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயரும் : மத்திய அமைச்சர் நம்பிக்கை

புதுடெல்லி, ஜன. 24-

அடுத்து வரும் 2024-25 நிதி ஆண்டில் இந்தியா 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயரும் என்று மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பகவான் ராமர் நமக்கு அருள்கிறார். தற்போது நாம் உலகின் 5-வது பெரிய பொருளாதாரமாகவும், பங்குச் சந்தையில் 4-வது பெரிய பொருளாதாரமாகவும் உருவெடுத்திருக்கிறோம். அடுத்த ஒன்றிரெண்டு ஆண்டுகளில், நாம் நான்காவது பெரிய பொருளாதாரமாக மட்டுமல்ல, அதைத் தாண்டியும் முன்னேறிச் செல்வோம் என்று நான் நினைக்கிறேன்.


இந்திய பொருளாதாரம் 2028-க்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவெடுக்கும் என்று என்னிடம் ஒருவர் சொன்னார். அப்போது நான், 2028 வரை காத்திருக்க வேண்டிய தேவை இருக்காது என்று நான் அவரிடம் சொன்னேன். 2024-25 நிதி ஆண்டில் அது நிகழும். 2030-ம் ஆண்டுக்குள் நாம் 10 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவெடுப்போம். இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு, ஆட்டோமொபைல், எரிசக்தி, இயற்கை எரிவாயு என எந்த துறையாக இருந்தாலும், அதன் மீதான உலகின் ஆர்வம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எனவே, இந்திய பொருளாதாரம் மிகவும் சிறப்பாக உள்ளது" என தெரிவித்தார்.

தற்போது இந்திய பொருளாதாரம் 3.7 டிரில்லியன் டாலர் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்திய பொருளாதார வளர்ச்சி 2021-22ல் 8.7 சதவீதமாகவும், 2022-23ல் 7.2 சதவீதமாகவும் இருந்தது. 2023-24ல் அது 7.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பங்குச் சந்தையைப் பொருத்தவரை அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன. ஹாங் காங் நான்காவது இடத்தில் இருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் திங்கள்கிழமை இந்திய பங்குச் சந்தையில் 4.33 டிரில்லியன் டாலர் மதிப்பு பங்குகள் பட்டியலிடப்பட்டன. ஹாங்காங் 4.29 ட்ரில்லியன் டாலர் மதிப்பு பங்குகளை பட்டியலிட்டது. இதையடுத்து, 4வது இடத்தில் இருந்த ஹாங்காங்-கை பின்னுக்குத் தள்ளி அந்த இடத்தை இந்தியா பிடித்துள்ளது.

கடந்த டிசம்பர் 5ம் தேதி இந்தியா முதன்முறையாக 4 ட்ரில்லியன் டாலர் மதிப்புள்ள பங்குகளை சந்தையில் பட்டியலிட்டது. 4 ஆண்டுகளுக்கு முன்தான் இந்திய பங்குச் சந்தையில் 2 டிரில்லியன் டாலர் மதிப்பு பங்குகள் பட்டியலிடப்பட்டன. இது இந்திய பொருளாதாரம் வேகமாக வளர்வதன் அறிகுறி என பங்குச் சந்தை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேர் கைது : உடனடியாக மீட்க நடவடிக்கை தேவை – மத்திய அரசுக்கு அன்புமணி வலியுறுத்தல்



சென்னை : ஜன. 24, வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் இரு படகுகளையும் சிங்களப் படையினர் பறிமுதல் செய்திருக்கின்றனர். உடனடியாக அவர்களை மீட்க நடவடிக்கை வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் இரு படகுகளையும் சிங்களப் படையினர் பறிமுதல் செய்திருக்கின்றனர். தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது சிங்களப் படையினர் அத்துமீறி கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மொத்தம் 3 நிகழ்வுகளில் 40 தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய அரசின் வலியுறுத்தலை ஏற்று அவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அதற்கான ஆணை கூட இன்னும் பிறப்பிக்கப்படாத நிலையில் அடுத்தக்கட்டமாக மேலும் 6 மீனவர்களை இலங்கைப் படைகள் கைது செய்துள்ளன.

தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர் நிகழ்வாகி விட்டன. இலங்கைப் படையினரின் தொடர் அத்துமீறல்கள் காரணமாக தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். இலங்கைப் படையினரின் இந்த அத்துமீறலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கைது செய்யப்பட்ட 8 மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகளை முழுமையாக நேரலை செய்வதில் என்ன பிரச்சினை? உயர் நீதிமன்றம் கேள்வி



**சென்னை , ஜன. 24-**

**"நாடாளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. தமிழக சட்டப்பேரவை நடவடிக்கைகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வதில் என்ன பிரச்சினை உள்ளது?" என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.**

சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய உத்தரவிடக் கோரி மறைந்த தேமுதிக தலைவர் மறைந்த விஜயகாந்த் உள்ளிட்டோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் தலைமை நீதிபதி எஸ்.கே.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, விஜயகாந்த் மரணமடைந்த விவரம் குறித்து வழக்கறிஞர் வி.டி. பாலாஜி நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார். மேலும், அவரது சட்டபூர்வமான பிரதிநிதி மூலம் வழக்கை தொடர்ந்து நடத்த இருப்பதாக தெரிவித்தார்.

அப்போது தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், "தற்போது தமிழக சட்டமன்றத்தில் கேள்வி நேரம், கவன ஈர்ப்பு தீர்மானங்கள் மீதான விவாதங்கள், ஆளுநர் உரை, பட்ஜெட் உரைகள், அமைச்சர்களின் பதிலுரைகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.

சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் பேச்சுக்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படும்போது, அவை நேரடியாக ஒளிபரப்பப்பட வாய்ப்புள்ளது. இதனால், சபை நடவடிக்கைகள் முழுவதையும் நேரடியாக ஒளிபரப்பு செய்ய இயலாது. இந்தவழக்கில்ஒருமனுதாரராக உள்ள எஸ்.பி.வேலுமணி அமைச்சராக இருந்தபோது, பேரவை நிகழ்வுகளை ஒளிபரப்பவில்லை. தற்போது ஆட்சி மாற்றத்துக்கு பிறகு பேரவை நிகழ்வுகளை நேரலையில் ஒளிபரப்ப வேண்டுமென வலியுறுத்துகிறார்" என்று வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், "நாடாளுமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. தமிழக சட்டமன்ற நடவடிக்கைகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வதில் என்ன பிரச்சினை உள்ளது?" என கேள்வி எழுப்பினர். பின்னர், இது குறித்து அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை மார்ச் 11-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்துதான் இயக்கப்பட வேண்டும் : அமைச்சர் சிவசங்கர் திட்டவட்டம்



**சென்னை : ஜன. 24, கிளாம்பாக்கத்தில் இருந்துதான் ஆம்னி பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.**

சென்னைநகருக்குள்ஏற்படும் போக்குவரத்துநெரிசலைகுறைக்க கிளாம்பாக்கத்தில் புதிதாக பஸ் முனையம்திறக்கப்பட்டுஉள்ளது. தென்மாவட்டங்கள், கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு பொங்கல் பண்டிகையின்போது அரசு விரைவு பஸ்கள் அங்கிருந்து இயக்கப்பட்டன. பொங்கலுக்கு பிறகு அனைத்து அரசு விரைவு பஸ்களும் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுகிறது. ஆனால் இதுவரை ஆம்னி பேருந்துகள் மட்டும் கோயம்பேட்டில் இருந்து தான் இயக்கப்பட்டுவருகிறது.

இந்நிலையில், வருகிற 25, 26 ஆகிய நாட்கள் அரசு விடுமுறையாகும். அதனை தொடர்ந்து சனி, ஞாயிறு வழக்கமான விடுமுறை நாட்கள் வருவதால் 4 நாட்கள் தொடர் விடுமுறையாக உள்ளது. இதனால் வெளியூர் பயணம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே சென்னையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தாமல் தவிர்க்க ஆம்னி பேருந்துகளை இன்று கிளாம்பாக்கத்தில் இருந்துதான் இயக்கப்பட வேண்டும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கூறியதாவது; கிளாம்பாக்கத்தில் இருந்து அரசு பேருந்துகள் செல்லும் போது ஆம்னி பேருந்துகளும் அங்கிருந்துதான் இயக்குவது சரியாக இருக்கும். ஆம்னி பேருந்துகள் வேறு இடத்தில் இருந்து இயங்கினால் போட்டி ஏற்படும் சூழல் நிலவும். கிளாம்பாக்கத்தில் இருந்து விரைவில் ஆம்னி பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். இம்மாத இறுதிக்குள் அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்துகளும் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும். அனைத்து பேருந்துகளிலும் தானியங்கி கதவு பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சிவசங்கர் கூறினார்.

# சுந்தம்பட்டி அரசு நடுநிலைப்பள்ளிக்கு கழிப்பறை வசதி அமைத்து தர மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை



**கந்தர்வகோட்டை : ஜன. 24-**

கந்தர்வகோட்டை அருகே சுந்தம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பறை வசதியும் சுற்றுச்சுவரும் அமைத்து தர வேண்டுமென மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், சுந்தம்பட்டி ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகின்றது. இந்தப் பள்ளியில் சுந்தம்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதி மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த பள்ளி மாணவர்களுக்கான போதிய கழிப்பறை வசதிகளும், குடிநீர் வசதிகளும் இல்லை என்பதால் மாணவ, மாணவிகள் அந்த பகுதியில் உள்ள ஆர். எஸ்பதிகாடு, கருவேலம் காட்டுப் பகுதிகளை தாங்கள் இயற்கை உபாதைகள் கழிப்பதற்காக பயன்படுத்தி வரும் அவல நிலையில் உள்ளனர். இந்த பள்ளியைச் சுற்றி சுற்றுச்சுவர் இல்லாததால் பாதுகாப்பற்ற நிலையும் பாம்பு, பூச்சி உள்ளிட்ட ஜீவராசிகளின் தொந்தரவும் உண்டு என்கின்றனர். எனவே இந்த பள்ளிக்கு விரைந்து கழிப்பறை வசதியும், சுற்றுச்சுவரும் அமைத்து தர வேண்டுமென இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் ஊர் பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# வேங்கைவயல் விவகாரம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரணைக்கு ஒப்படைக்க ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை : ஜன. 24-

வேங்கைவயல் குடிநீர் தொட்டியில் மலம் கலக்கப்பட்ட விவகாரத்தில் 31 பேரிடம் நடத்தப்பட்ட டி.என்.ஏ சோதனை தோல்வியடை ந்திருக்கிறது. இந்த விவகாரத்தில் சி.பி. சி.ஐ.டி விசாரணை பெரும் பின்னடைவை சந்தித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி பெற்றுத் தர என்ன செய்யப் போகிறது? என்பதை தமிழக அரசு விளக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு ஒப்படைக்க வேண்டும்" என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்கள் பயன்படுத்தும் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டியில் மலம் கலக்கப்பட்டது தொடர்பான வழக்கில் 31 பேரிடம் நடத்தப்பட்ட டி.என்.ஏ சோதனை தோல்வியடை ந்திருக்கிறது.

வேங்கைவயல் குடிநீர் தொட்டியிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரியுடன், 31 பேரின் டிஎன்ஏக்களும் ஒத்துப்போகவில்லை என்பதை சி.பி.சி.ஐ.டி காவல்துறையினர் ஒப்புக்கொண்டுள்ளனர். இதன் மூலம் ஓராண்டுக்கு முன் விசாரணை எந்த இடத்தில் தொடங்கியதோ, அதே இடத்திற்கே மீண்டும் திரும்பிச் சென்றுள்ளது. வேங்கைவயல் குற்றத்தில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க காவல்துறை தவறியிருப்பது கண்டிக்கத்தக்கது.

வேங்கைவயல் விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதில் தமிழக அரசு தொடக்கத்திலிருந்தே ஆர்வம் காட்டவில்லை. இது குறித்து சிபிஐ விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் வலியுறுத்தி வந்த நிலையில், சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு தமிழக அரசு ஆணையிட்டது. சி.பி. சி.ஐ.டி காவல்துறையினரோ பாதிக்கப்பட்டவர்கள் தரப்பிலிருந்தே பலரை டி.என்.ஏ சோதனைக்கு உள்ளாக்கினார்கள். குற்றமிழைத்தவர்களை விடுத்து பாதிக்கப்பட்டவர்களை மையமாக வைத்து விசாரணை நடத்தப்பட்டதால் தான் அது தோல்வியடைந்துள்ளது.

வேங்கைவயல் வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் காவல்துறை தப்பவிட்டு விட்டது என்பது தான் தெளிவாக தெரியவரும் உண்மை ஆகும். இந்த வழக்கில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ள காவல்துறை, அடுத்தக்கட்டமாக 10 பேரிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்த நீதிமன்றத்திடம் அனுமதி கோரியிருக்கிறது. அனுமதி கிடைக்காவிட்டால் அடுத்து என்னவாகும்? என்பது தெரியவில்லை.

வேங்கைவயல் குடிநீர் தொட்டியில் மலம் கலக்கப்பட்ட நிகழ்வை தனித்து பார்க்க முடியாது. அந்த வழக்கில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாததன் காரணமாக தமிழகத்தின் பல பகுதிகளில் அதே போன்ற நிகழ்வுகள் நடந்து அரசால் மூடி மறைக்கப்பட்டுள்ளன. வேங்கைவயல் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப் படாவிட்டால், அது அரசுக்கு பெரும் அவப்பெயரை ஏற்படுத்தி விடும்.

இந்த விவகாரத்தில் சி.பி. சி.ஐ.டி விசாரணை பெரும் பின்னடைவை சந்தித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி பெற்றுத் தர என்ன செய்யப் போகிறது? என்பதை தமிழக அரசு விளக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு ஒப்படைக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

## அரையிறுதிக்கு முன்னேறிய அரினா சபலென்கா



**மெல்போர்ன் : ஜன. 24,**

**ஆண்டின் முதல் 'கிராண்ட்ஸ்லாம்' போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.**

ஆண்டின் முதல் 'கிராண்ட்ஸ்லாம்' போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த போட்டி, வருகிற 28-ந்தேதி வரை நடக்கவுள்ளது. தொடர் தற்போது விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டத்தில் முன்னணி வீராங்கனையான பெலாரசின் அரினா சபலெங்கா, செக் வீராங்கனையான பார்போரா கிரெஜிகோவாவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஆடம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட சபலென்கா 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் பார்போரா கிரெஜிகோவாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். அரினா சபலென்கா அரையிறுதியில் அமெரிக்காவின் கோகோ காப்பை எதிர்கொள்கிறார்.

# 'பவானி தேவியின் சாதனைகளால் ஊக்கம் கிடைக்கிறது' தமிழக வீரர் அன்பிலஸ் காட்வின்



**சென்னை : ஜன. 24,**

**ஒலிம்பியன் பவானி தேவியின் வெற்றிப் பயணத்தால் ஈர்க்கப்பட்டு அவரது பாதையை பின்பற்றி விளையாடி வருவதாக 6-வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியின் வாள்வீச்சில் தங்கப்பதக்கம் வென்ற தமிழக வீரர் அன்பிலஸ் காட்வின் தெரிவித்தார்.**

இது குறித்து கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 17 வயதான அன்பிலஸ்காட்வின் கூறிதாவது: நான்இன்னும் நிறைய போட்டிகளில் விளையாடவும், அதற்கான நீண்ட பயணத்தை மேற்கொள்ளவும் கேலோ இந்தியாஇளைஞர் போட்டி பெரிதும் உதவுகிறது. திறமையான வாள்வீச்சு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளுக்கு உயர்பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

முன்னணி வீராங்கனையான பவானிதேவியின் வெற்றிகள், இந்த விளையாட்டில் ஒரு பெரியதிருப்பத்தை ஏற்படுத்தியதால், பலர் இதில் ஈடுபட்டு பல்வேறு வெற்றிகளை குவித்துவருகிறார்கள். சீனியர் தேசிய வாள்வீச்சு போட்டியின் போதுதான் நான்பவானிதேவியின் ஆட்டத்தை பார்த்தேன். நாடு முழுவதிலும் இருந்து அவருக்கு அமோக பாராட்டுகள் கிடைத்து வருகிறது. முன்பெல்லாம் வாள்வீச்சு விளையாட்டுக்கென்று போதிய வசதிகள் இருந்தது இல்லை. தற்போது அந்த நிலை கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளால்பெரிய அளவில் மாறிஉள்ளது. இதன் மூலம் வாள்வீச்சில் மேலும் பல வீரர்கள்பதக்கம் வெல்லும் நிலை உருவாகி உள்ளது. இவ்வாறு அன்பிலஸ் காட்வின் கூறினார்.

வரலாறு சினிமா

# "இது ஆன்மிகம் சார்ந்ததே" அயோத்தியில் இருந்து சென்னை திரும்பிய ரஜினி கருத்து



**சென்னை : ஜன. 24,**

**அயோத்தியில் இருந்து சென்னை திரும்பிய நடிகர் ரஜினிகாந்த், "ராமர் கோயில் திறப்பு நிகழ்வு என்பது ஆன்மிகம் சார்ந்ததே" என்று கருத்து தெரிவித்துள்ளார்.**

உத்தரப் பிரதேசம் மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழா திங்கட்கிழமை வெகு விமர்சையாக நடைபெற்றது. நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவிஐபிக்கள் கலந்துகொண்டனர். அந்த வகையில் நடிகர் ரஜினிகாந்த் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். சச்சின் டெண்டுல்கருடன் இணைந்து அவர் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வைலாகின. தொடர்ந்து "இனி வருடா வருடம் ராமர் கோயிலுக்கு வருவேன்" என்றும் அயோத்தியில் ரஜினி பேட்டியளித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று மாலை அயோத்தியில் இருந்து சென்னை திரும்பிய நடிகர் ரஜினிகாந்த் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது: "சிறப்பான முறையில் தரிசனம் நடைபெற்றது. அயோத்தியில் ராமர் கோயில் திறந்ததும் முதலில் பார்த்த 150 - 200 நபர்களில் நானும் ஒருவன் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இது ஆன்மிகம் சார்ந்த நிகழ்வு தான்" என்றார்.

அவரிடம் செய்தியாளர்கள், இந்தியா முழுவதும் ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டிய சூழலில் இது மத அரசியலை முன்னிறுத்தும் நிகழ்வு என கூறப்படுகிறதே? என்று கேட்டதற்கு, "ஒவ்வொருவரின் பார்வை ஒவ்வொரு மாதிரி இருக்கும். எல்லோருடைய பார்வையும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என அவசியமில்லை. அது அவரவர்களின் சொந்த கருத்து. என் பார்வையில் இது ஆன்மிகம் சார்ந்ததே" என்றார்.

# வடக்குப்பட்டி ராமசாமியில் சர்ச்சை காட்சிகளா : இயக்குநர் விளக்கம்



**சென்னை : ஜன. 24,**

**சந்தானம், மேகா ஆகாஷ் ஜோடியாக நடித்துள்ள படம், 'வடக்குப்பட்டி ராமசாமி'.**

'டிக்கிலோனா' படத்தை இயக்கிய கார்த்திக் யோகி இயக்கியுள்ளார். இதில் நிழல்கள் ரவி, தமிழ், ஜான் விஜய், எம்.எஸ்.பாஸ்கர், ரவி மரியா உட்பட பலர் நடித்துள்ளனர். பீப்பிள் மீடியா பேக்டரி தயாரிக்கும் இந்தப் படத்துக்கு ஷான் ரோல்டன் இசை அமைத்துள்ளார். தீபக் ஒளிப்பதிவு செய்துள்ளார். படம், பிப்.2-ல் வெளியாக இருக்கிறது. இதன் டிரெய்லரில் பெரியார் குறித்த சர்ச்சை காட்சிகள் இருப்பதாகக் கூறி சமூக வலைதளங்களில் எதிர்ப்பு கிளம்பியது.

இதுபற்றி இயக்குநர் கார்த்திக் யோகி கூறும்போது, "இது முழு காமெடி படம். 1974-ம் ஆண்டு பின்னணியில் ஒரு கற்பனை கிராமத்தில் நடப்பது போல கதை அமைக்கப்பட்டுள்ளது. கிராமத்து நையாண்டியால் ஹீரோவுக்கும் வில்லனுக்கும் ஏற்படும் பிரச்சினை எங்கு போய் முடிகிறது என்பது படம். அதிக காமெடி நடிகர்கள் இதில் பங்கேற்றுள்ளார்கள். படத்தில் எந்த சர்ச்சைக்காட்சிகளும் இல்லை. யார் மனதும் புண்படும்படியும் காட்சிகள் இருக்காது. படம் பார்க்கும்போது அது புரியும். படத்தை 63 நாளில் எடுத்து முடித்தோம். இது எல்லோருக்குமான படமாக இருக்கும்" என்றார்.

# இந்தியாவுடனான டெஸ்ட் தொடர் கடும் சவால்களை கொடுக்கும் இங்கிலாந்து பயிற்சியாளர் மெக்குல்லம் சொல்கிறார்



**ஐதராபாத் : ஜன. 24,**

**இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளர் பிரண்டன் மெக்குல்லம், முதல் டெஸ்ட் போட்டி நடைபெற உள்ள ஐதராபாத் மைதானம் குறித்து கூறியதாவது:**

மைதானம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. முதல் பந்தில் இருந்து திரும்பாது என்றாலும் நிச்சயம் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாக தான் மைதானம் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த தொடர் முழுவதுமே சுழற்பந்து வீச்சு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். நான் இங்கிலாந்து அணி பயிற்சியாளராக பணியை தொடங்கும் போது டெஸ்ட் கிரிக்கெட்டில் மக்கள் பொழுதை கழிக்க தங்களால் முடிந்த அளவு கொடுக்க வேண்டும் என்று அதிரடியாக ஆட நினைத்தோம்.

அப்படி அதிரடியாக ஆடும் போது எங்களுக்கு வெற்றி வாய்ப்பு கிடைத்தது. தற்போது அதிரடியாக ஆடுவதற்கு இந்தியாவை தவிர ஏற்ற வேறு நாடு ஏதேனும் இருக்கிறதா? நாங்கள் இந்தியாவில் விளையாடும் போது உலகம் முழுவதும் பல ரசிகர்கள் இந்த போட்டியை பார்ப்பார்கள். இது நிச்சயம் எங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பு ஆகும். இந்தியா என்பது வாய்ப்புகளின் பூமியாகும். இந்த வாய்ப்பை எதிர்நோக்கி காத்திருப்பது உற்சாகத்தையும் கொடுக்கிறது. இந்த போட்டி எத்தனை நாள் நடைபெறும் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் இரு அணிகளும் தங்களுக்கு உரிய ஸ்டைலில் விளையாடுவார்கள்.

எப்படி ஆசஸ்தொடர் இரு பலம் வாய்ந்த அணிகளுக்கு இடையே நடந்த போட்டியாக இருந்ததோ, அதேபோல் இந்த தொடரும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியாவின் 20 விக்கெட்டுகளை நாங்கள் ஒவ்வொரு டெஸ்டிலும் வீழ்த்த வேண்டும். இந்தியாவை விட ஒரு ரன் கூடுதலாக பேட்டிங் அடிக்க வேண்டும். இது ஒன்றும் ராக்கெட் தொழில்நுட்பம் இல்லை. இதுதான் போட்டியின் வெற்றி அம்சமே. இந்தத் தொடர் எங்களுக்கு கடும் சவால்களை கொடுக்கும். எங்களுடைய யுத்தி இந்த தொடரில் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படும். இதனால் தான் இந்த தொடர் எனக்கு மிகப்பெரிய உற்சாகத்தை கொடுத்திருக்கிறது'' என்றார்.

# "முதல் பந்தில் இருந்தே சுழலுக்கு சாதகமாக ஆடுகளம் இருந்தால்" – இந்திய அணிக்கு வாகன் அலர்ட்



**மும்பை : ஜன. 24,**

**இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி வரும் நாளை தொடங்க உள்ளது. இந்நிலையில், இந்திய அணிக்கு ரெட் அலர்ட் கொடுத்துள்ளார் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன்.**

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இரு அணி வீரர்களும் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தத் தொடரின் முதல் போட்டி ஹைதராபாத் நகரில் நடைபெற உள்ளது. இங்கிலாந்து அணியின் பாஸ்பால் அணுகுமுறை இந்தத் தொடரில் எந்த அளவுக்கு உதவும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இந்தச் சூழலில் இந்திய ஆடுகள தயாரிப்பு சார்ந்து தனது கருத்தை மைக்கேல் வாகன் தெரிவித்துள்ளார்.

"முதல் பந்தில் இருந்தே சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தை இந்தியா அமைக்க கூடாது. அப்படி செய்தால் அது பெரிய தவறாக அமையும். அதனை இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளும் நிலை உள்ளது. அதேபோல இங்கிலாந்து பேட்ஸ்மேன்கள் நீண்ட நேரம் பேட் செய்யவில்லை என்றாலும் விரைந்து ரன் சேர்க்கவே முயற்சிப்பார்கள்.

ஜடேஜாவை விட ஜாக் லீச் சிறந்த சுழற்பந்து வீச்சாளரா என்ற கேள்வி எழலாம். ஆனால், இங்கிலாந்து அணி முதலில் பேட் செய்தால் அடுத்த இன்னிங்ஸில் அவர் சிறப்பாக செயல்படலாம். அதனால் சுழலுக்கு சாதகமான ஆடுகளங்கள் இந்தியாவுக்கு அச்சுறுத்தல். ஃப்ளாட் பிட்ச்களில் இந்தியா ரன்கள் குவிக்கலாம். இங்கிலாந்து வீரர்களை அவுட் செய்ய அந்த அணியின் பவுலர்கள் முயற்சிக்கலாம்" என வாகன் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தொடங்கவே இல்லை. அதற்குள் ஆடுகளம் குறித்து வாகன் இப்படி பேசியுள்ளார்.

# "இங்கிலாந்து 'பாஸ்பால்' அதிரடி காட்டினால் விக்கெட்டுகளைக் குவிப்பேன்" – பும்ரா




**மும்பை : ஜன. 24,**

**இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் சொந்த மண்ணில் ஆடவுள்ளது.**

இப்போதைய பேச்சு என்னவெனில் இங்கிலாந்தின் பேட்டிங் அணுகுமுறை பற்றியதே. அதாவது சமீப காலமாக இங்கிலாந்து பேட்டர்கள் வருவது வரட்டும் பிட்சாவது மண்ணாவது மட்டையை எடுத்தால் விளாசல்தான் என்று டெஸ்ட் போட்டிகளில் ஆடி அதில் நிறைய வெற்றிகளையும் குவித்து வருகிறார்கள், ஆனால், இந்த அணுகுமுறை இந்தியாவில் பலிக்குமா என்பதுதான் கேள்வி.

இந்நிலையில்தான் பும்ரா கூறுகிறார், 'பாஸ்பால் அதிரடி காட்டினால் நான் விக்கெட்டுகளைக் குவிப்பேன்' என்று. இவர் கூறுவது உண்மையா? ஏனெனில், பர்மிங்ஹாமில் இவரது கேப்டன்சியில் 5-வது டெஸ்ட் போட்டியில் ஆடியபோது இவரால் மட்டுமல்ல சிராஜ், ஷமி போன்றோராலும் விக்கெட்டுகளை வீழ்த்த முடியவில்லை என்பதுதான் உண்மை. இப்போது வந்து மார்த்தட்டுவது இங்கிலாந்தை அதன் நோக்கத்திலிருந்து பின்னடையச் செய்வதாக மட்டுமேதான் பார்க்க முடியும். பும்ரா இதைச் செய்து விடுவார் என்பதாகப் பார்க்கப்பட முடியாது.

முதலில் பும்ரா கார்டியன் இதழுக்குக் கூறுவதைப் பார்ப்போம்: "டெஸ்ட் கிரிக்கெட்தான் கிங் என சொல்லும் தலைமுறையைச் சேர்ந்தவன் நான். டெஸ்ட் கிரிக்கெட் பவுலிங்கை வைத்தே நான் என்னை எடை போடுகிறேன். நான் ஐபிஎல் மூலம்தான் தொடங்கினேன். ஆனால், முதல் தர கிரிக்கெட் மூலம் கற்றுக் கொண்டேன். அங்குதான் என் திறமைகளை வளர்த்துக் கொண்டேன். அங்குதான் விக்கெட்டுகளை வீழ்த்தும் கலையைக் கற்றுக் கொண்டேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் பேட்டரை வீழ்த்தியே ஆக வேண்டும், இது ஒரு பெரிய சவால்.

டி20-யிலும் ஒருநாள் போட்டிகளிலும் 5 ஸ்லோ பந்துகளை வீசி 5 பேட்டர்களை வீழ்த்தலாம், ஆனால் டெஸ்ட் போட்டிகள் அப்படியல்ல. அதிர்ஷ்டம் பெரிதும் வேலை செய்யாதது டெஸ்ட் கிரிக்கெட்டில்தான். ஏனெனில், நீங்கள் ஒரு அணியின் 20 விக்கெட்டுகளை வீழ்த்துவது அதிர்ஷ்டம் காரணமாக அல்ல. வெள்ளைப்பந்து கிரிக்கெட்டுடன் எனக்கு திருப்தி கிடைப்பதில்லை, டெஸ்ட் கிரிக்கெட்தான் எனக்கு ஆத்ம திருப்தி.

இங்கிலாந்தின் பாஸ்பால் அணுகுமுறையுடன் நான் என்னை தொடர்பு படுத்த விரும்பவில்லை. ஆனால், அது உற்சாகமாகத்தான் இருக்கிறது. இதனால் பவுலர்களுக்கும் வாய்ப்பு உள்ளதுதானே. இங்கிலாந்து வெற்றிகரமாக இதைப் பயன்படுத்துகின்றனர். எதிரணியினரை ஆக்ரோஷமாக டீல் செய்கின்றனர். டெஸ்ட் கிரிக்கெட்டை இப்படியும் ஆட முடியும் என்று காட்டுகிறார்கள்.

ஒரு பவுலராக நான் கூற வருவது என்னவெனில் இந்த அணுகுமுறை என்னைப் போன்ற பவுலர்களுக்கும் வாய்ப்பு வழங்குவதுதான். அவர்கள் வேகமாக விளையாடுவதன் மூலம் என்னைக் களைப்படையச் செய்யமாட்டார்கள். அதனால் நான் விக்கெட்டுகளைக் குவிப்பேன். அவரவர்கள் கடைப்பிடிக்கும் வழியில் நான் எப்படி உள்ளே பூரலாம் என்றுதான் நான் பார்ப்பேன். அவர்களுக்கு வாழ்த்துக்கள். ஆனால், ஒரு பவுலராக நான் எப்போதும் ஆட்டத்தில் இருப்பேன்" என்கிறார்.

ஆனால், இவர் விக்கெட்டுகளைக் குவிப்பேன் என்று கூறுவது இருவிதங்களில் ஓவர் ஸ்டேட்மெண்ட் என்று கூறலாம். ஒன்று இந்தியாவில் போடப்படும் குழிப்பிட்ச்களில் ஒரு முனையில் எடுத்த எடுப்பிலேயே அக்சர் படேலோ, அஸ்வினோ வந்து விடுவார்கள். கடந்த முறை இங்கிலாந்து இங்கு வந்திருந்த போது பும்ரா 48 ஓவர்களை மட்டுமே வீச முடிந்தது. எங்கே விக்கெட்டுகளைக் குவிப்பது?

இரண்டாவது, பும்ராவே இங்கிலாந்தின் பாஸ்பால் அதிரடியில் சிக்கியதுதான். பர்மிங்ஹாமில் நடைபெற்ற டெஸ்ட்போட்டியில் இவர்தான் கேப்டன். இங்கிலாந்து கண்டிஷனில் இவரால் 378 ரன்கள் வெற்றி இலக்கைத் தோல்வியிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. இங்கிலாந்து போட்டு புரட்டி எடுத்ததில் 378 ரன்கள் 79 ஓவர்கள்தான் தாங்கியது. ஜோ ரூட், ஜானி பேர்ஸ்டோவ் போன்றவர்கள் இந்திய வேகப்பந்து வீச்சாளர்களை இறங்கி இறங்கி வந்து சாத்தினர். பும்ராவே 17 ஓவர்கள் வீசி 74 ரன்களை கொடுத்தார். சிராஜ் 15 ஓவர்கள், 98 ரன்கள். சர்துல் தாக்கூர் 11 ஓவர்கள், 65 ரன்கள்.

இந்த சாத்தையெல்லாம் பும்ரா மறந்து விடுவாரா? மறக்கத்தான் முடியுமா? ஆனால், விக்கெட்டுகளைக் குவிப்பேன் என்கிறார். பார்ப்போம், பும்ராவினால் முடியாதது என்று எதுவும் இல்லை என்றுநம்புவோமாக.

# அனிமல் படத்துக்கு டாப்ஸி எதிர்ப்பு




**சென்னை : ஜன. 24,**

**தமிழில், ஆடுகளம், வந்தான் வென்றான், ஆரம்பம் உட்பட சில படங்களில் நடித்தவர் டாப்ஸி. இந்திப் படங்களில் இப்போது நடித்து வரும் அவர், பேட்மிண்டன் வீரர் மத்தியாஸ் போ என்பவரைக் காதலித்து வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் வெளியாகி ரூ.912 கோடி வசூலித்துள்ள 'அனிமல்' படம் பற்றி அவர் கூறியுள்ள கருத்து, பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.**

ரன்பீர் கபூர், ராஷ்மிகா நடித்துள்ள 'அனிமல்' படம் பெண் வெறுப்பு, அதீத வன்முறையை கொண்டிருப்பதாகக் கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. இந்தி பாடலாசிரியர் ஜாவேத் அக்தர் உட்பட பலர் இந்தப் படத்துக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்தனர்.

இதுபற்றி டாப்ஸியிடம் கேட்டபோது, "இதுபோன்ற ஒரு படத்தில் நான் நடிக்கவே மாட்டேன்" என்றார். அவர் மேலும் கூறும்போது, "அந்தப் படத்தை நான் பார்க்கவில்லை. ஆனால், அதுபற்றி பலர் கூறியிருக்கிறார்கள். ஹாலிவுட்டில் வெளியான, கான்கேர்ள் படத்தை ஒப்பிட்டு, அது பிடித்தால் 'அனிமல்' ஏன் பிடிக்கவில்லை? என்று கேட்கிறார்கள். ஹாலிவுட்டில் நடிகர், நடிகைகளின் ஹேர்ஸ்டைலை ரசிகர்கள் பின்பற்றுவதில்லை. அங்கு படம் பார்த்துவிட்டு யாரும் பெண்களைப் பின் தொடர்வதில்லை. ஆனால், நம் நாட்டில் இதெல்லாம் நடக்கிறது. இதுதான் யதார்த்தம். இதனால் நம் திரையுலகை, ஹாலிவுட்டோடு ஒப்பிட்டு 'அனிமல்' படம் பற்றி ஏன் இப்படிப் பேசுகிறார்கள் என்று கேட்கமுடியாது. அந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று கூறியுள்ளார்.

# கங்கனா ரனாவத்தின் 'எமர்ஜென்சி' ஜூன் 14-ல் ரிலீஸ்




**மும்பை : ஜன. 24,**

**கங்கனா ரனாவத் இயக்கி நடித்துள்ள 'எமர்ஜென்சி' பாலிவுட் திரைப்படம் வரும் ஜூன் 14-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

'தாகத்', 'சந்திரமுகி 2', 'தேஜஸ்' என அடுத்தடுத்த படங்களின் தோல்வியில் இருக்கிறார் நடிகை கங்கனா ரனாவத். வெற்றியை எதிர்நோக்கும் அவரின் அடுத்த படைப்பு 'எமர்ஜென்சி'. இப்படத்தை இயக்கி நடித்துள்ளார் கங்கனா. முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நாடு முழுவதும் அமல்படுத்திய அவசரநிலை பிரகடனத்தை மையமாக வைத்து இப்படம் உருவாகியுள்ளது. படத்துக்கு ரித்தேஷ் ஷா திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். படப்பிடிப்பு கடந்த ஆண்டு ஜனவரி மாதமே முடிவடைந்தது.

இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று படம் நவம்பர் 24-ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், வெளியாகவில்லை. ராமர் கோயில் திறப்பு விழாவில் கலந்துகொண்ட நடிகை கங்கனா நேற்று தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 'எமர்ஜென்சி' படத்தின் ரிலீஸ் தேதியை வெளியிட்டுள்ளார். அதன்படி படம் வரும் ஜூன் 14-ம் தேதி திரைக்கு வருகிறது. படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் அனுபம் கெர் நடித்துள்ளார்.

முன்னதாக, இப்படம் குறித்து பேசியிருந்த கங்கனா, "எமர்ஜென்சி என்பது இந்திய வரலாற்றின் இருண்ட அத்தியாயம். இதனை இளம் தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். வரலாற்று நிகழ்வை திரைப்படமாக்கியது மகிழ்ச்சி" என தெரிவித்திருந்தார்.

வரலாறு உலகம்

# 3 மாத போரில் மோசமான தாக்குதல்

## 10 ராணுவ வீரர்கள் உயிரிழப்பு – இஸ்ரேல் தகவல்

**டெல் அவிவ் : ஜன. 24,**

**ஹமாஸ் ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.**



மத்திய கிழக்கு நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி போர் வெடித்தது. கடந்த 3 மாதங்களாக நீடித்து வரும் இந்த போர் காரணமாக காசாவில் இதுவரை உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 24 ஆயிரத்தைக் கடந்துள்ளது. ஹமாஸ் அமைப்பை முழுவதுமாக அழிக்கும் வரை போர் தொடர்ந்து நடைபெறும் என இஸ்ரேல் அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மத்திய காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவத்தினர் வெடிப்பொருட்களை தயார் செய்து கொண்டிருந்தபோது, ஹமாஸ் ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியதாகவும், இந்த தாக்குதலில் 10 ராணுவ வீரர்கள் உயிரிழந்ததாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. கடந்த 3 மாத போரில் மிகவும் மோசமான தாக்குதல் இது என இஸ்ரேல் ராணுவம் குறிப்பிட்டுள்ளது.

# ரஷியா மீது உக்ரைனின் தாக்குதலில் பலி எண்ணிக்கை 28 ஆக உயர்வு

**கீவ் : ஜன. 24,**

**ரஷியாவின் டோனெட்ஸ்க் நகரில் உள்ள சந்தை மீது உக்ரைன் சரமாரி பீரங்கி தாக்குதல் நடத்தியது.**



உக்ரைன்-ரஷியா போர் சுமார் 2 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சமீப காலமாக இந்த போரில் இரு நாடுகளும் மாறிமாறி டிரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலில் ஈடுபடுகின்றன. அதன்படி ரஷியாவின் டோனெட்ஸ்க் நகரில் உள்ள சந்தை மீது உக்ரைன் சரமாரி பீரங்கி தாக்குதல் நடத்தியது. அப்போது அங்கிருந்த பொதுமக்கள் அலறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்த தாக்குதலில் 25 பேர் உயிரிழந்ததாகவும், 25-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும் கூறப்பட்டது. இந்தநிலையில் தற்போது பலி எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது. இதனையடுத்து அங்கு ஒரு நாள் துக்க தினமாக அனுசரிக்கப்பட்டது. அப்போது உக்ரைன் தாக்குதலில் பலியானவர்களுக்கு அந்த சந்தை அருகே பொதுமக்கள் பலர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இதனிடையே இந்த தாக்குதலுக்கு உக்ரைன் மறுப்பு தெரிவித்துள்ளது.

# ரஷிய ராணுவ வீரர்களின் மனைவிகளால் புதிய சிக்கலில் புதின்

**ரஷியா : ஜன. 24,**

**2022 பிப்ரவரி மாதம், ரஷியா உக்ரைனை ஆக்கிரமித்தது. இதனை எதிர்த்து மேற்கத்திய நாடுகளின் துணையுடன் உக்ரைன் போரிட்டு வருகிறது.**



இரண்டாம் வருடத்தை நெருங்கும் இப்போரில் இரு தரப்பிலும் பலத்த உயிர்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளது. ரஷிய தரப்பில் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் உயிரிழந்துள்ளனர். 2022ல் சுமார் 3 லட்சம் உபரி ராணுவ வீரர்களை ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் படையில் சேர்த்தார்.

நீடிக்கும் போரினால் ராணுவ வீரர்கள் உயிரிழப்பதும், நீண்ட நாட்கள் குடும்பங்களை விட்டு பிரிந்திருப்பதும், படுகாயங்களால் உடல் உறுப்புகளை இழப்பதும் நடப்பதால், இந்த ராணுவ வீரர்களின் மனைவிகள் பொறுமை இழந்து வருகின்றனர். இது குறித்து சமூக வலைதளங்கள் வழியாக அவர்கள் உரையாடி, ஒருங்கிணைந்து “தி வே ஹோம்” எனும் ஒரு அமைப்பை உருவாக்கி உள்ளனர்.

நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமையில் தங்கள் கணவர்கள் அவர்களது பங்கை சரிவர செய்து விட்டதாகவும், இனி அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர். போரிஸ் நடெஸ்டின் எனும் முக்கிய அரசியல் தலைவரிடம் இது குறித்து முறையிட்ட வீரர்களின் மனைவிகள், “இரண்டாம் உலகப் போரின் போது ரஷியாவில் இருந்த நிலை வேறு. அப்போது நாங்கள் தாக்கப்பட்டோம். இப்போது நிலைமை அப்படி இல்லையே; நேரெதிரான நிலைதான் உள்ளது. எங்கள் கணவர்களை திருப்பி அனுப்ப எப்போது அரசாங்கம் முடிவெடுக்கும்? அவர்கள் கைகள் அல்லது கால்களை இழந்த பிறகா? படுகாயங்களினால் வெறும் காய்கறிகளை போல் அவர்கள் மாறியதும்தான் அவர்களை திருப்பி அனுப்புவீர்களா? இல்லை, அவர்களது உடல்கள் பிரேத பெட்டியில் அடைக்கப்பட்டு அனுப்பப்படும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டுமா?” என கோபத்துடன் கேட்டனர்.

போர் குறித்து பொதுவெளியில் எந்த விமர்சனம் செய்தாலும் ரஷியாவில் தண்டனைக்குரிய குற்றமாக பார்க்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்க்டிக் பனிக்கட்டிகளில் புதைந்து இருக்கும் ஜாம்பி வைரஸ்களால் ஆபத்து

**அமெரிக்கா : ஜன. 24,**

**உலகில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக செயலற்று இருக்கும் வைரஸ்கள் ஜாம்பி வைரஸ் என்று அழைக்கப்படுகிறது.**



இதற்கிடையே 48,500 ஆண்டுகளாக செயலிழந்து பனிக்கட்டிகளில் புதைந்திருந்த ஜாம்பி வைரஸ்களை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2022-ம் ஆண்டு கண்டறிந்தனர். இந்த வைரஸ்கள் மனிதர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தலாம் என கூறப்படும் நிலையில் அது தொடர்பான ஆராய்ச்சிகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில் ஆர்க்டிக் மற்றும் பிற இடங்களில் பனிக்கட்டிகளுக்கு அடியில் புதைந்து கிடக்கும் வைரஸ்களால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். ஆர்க்டிக்கில் பனிக்கட்டிகள் உருகுவதால் ஜாம்பி வைரஸ்கள் வெளியே வர வாய்ப்பு உள்ளது. இதனால் பேரழிவு தரும் உலகளாவிய சுகாதார அவசர நிலையைத் தூண்டக்கூடும் என்றும் புவி வெப்பமடைதல் காரணமாக அதிகரித்து வரும் வெப்பநிலையால் உறைந்த பனிக்கட்டிகள் உருகத் தொடங்கியதில் இருந்து இந்த அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# ராமரும், சீதையும் இந்தியா–நேபாளம் இடையிலான கலாசார இணைப்பின் அடையாளம்

## நேபாள மந்திரி என்.பி.சவூத்

**காத்மாண்டு : ஜன. 24,**

**ராமர் கோவில் திறப்பு விழா, சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்களுக்கு பெருமையான தருணமாகும் என நேபாள மந்திரி என். பி.சவூத் தெரிவித்துள்ளார்.**



உத்தர பிரதேச மாநிலம் அயோத்தில் கட்டப்பட்டுள்ள ராமர் கோவில் பிரதிஷ்டை விழா நேற்று முன்தினம் திங்கள்கிழமை கோலாகலமாக நடைபெற்றது. பால ராமர் பிரதிஷ்டையை தொடர்ந்து பிரதமர் மோடி முதலில் தீப ஆராதனை காட்டி வழிபாடு நடத்தினார். இந்த விழாவில் பல்வேறு அரசியல் தலைவர்கள், திரை நட்சத்திரங்கள், விளையாட்டு பிரபலங்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, நேபாள நாட்டில் உள்ள சீதை பிறந்த இடமாக நம்பப்படும் ஜானக்பூரில் இருந்து சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பரிசுப்பொருட்கள் அயோத்திக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ராமர் கோவில் பிரதிஷ்டை விழாவையொட்டி நேபாளத்தில் உள்ள கோவில்களில் தீபங்கள் ஏற்றப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

இந்தநிலையில், ராமரும், சீதையும் இந்தியா-நேபாளம் இடையிலான கலாசார இணைப்பின் அடையாளம் என நேபாளத்தின் வெளியுறவுத்துறை மந்திரி என்.பி.சவூத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “ஜெய் ஸ்ரீ ராம்! பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழா மற்றும் பிரதிஷ்டை விழா, சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் பெருமையான தருணமாகும்.

ராமரும், நேபாளத்தின் மகள் சீதையும் தைரியம், தியாகம் மற்றும் நீதியின் உருவகங்கள். அவர்கள் நேபாளத்திற்கும், இந்தியாவிற்கும் இடையிலான ஆழமான கலாசார மற்றும் நாகரீக இணைப்பை அடையாளப்படுத்துகிறார்கள். அவர்களின் நற்பண்புகளும், லட்சியங்களும் நம்மை மனித குல சேவைக்கு தொடர்ந்து வழிநடத்தட்டும்!” என்று தெரிவித்துள்ளார்.

# சீனாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் : ரிக்டர் அளவில் 7.2–ஆக பதிவு டெல்லியிலும் லேசான நில அதிர்வு உணரப்பட்டது

**பீஜிங் : ஜன. 24,**

**சீனாவின் கிர்கிஸ்தான் மற்றும் ஜின்ஜியாங் இடையேயான எல்லைப் பகுதியில் நேற்றி முன்தினம் திங்கள்கிழமை 11.39 மணி அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.**



பூமிக்கு அடியில் 80 கி.மீ. ஆழத்தில்ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.2-ஆக பதிவானது. கிர்கிஸ்தான் மற்றும் ஜின்ஜியாங் இடையேயான எல்லைப் பகுதியில் 7.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஜெர்மன் புவி அறிவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

GFZ படி, நிலநடுக்கம் 10 கிமீ (6.21 மைல்) ஆழத்தை எட்டியது. 7.01 ரிக்டர் அளவில் நிலநடுக்கம், சீனாவின் சின்ஜியாங் பகுதியில், குறிப்பாக அக்சு நகருக்கு மேற்கே 140 கிலோமீட்டர் தொலைவில் 27 கிலோமீட்டர் (17 மைல்) ஆழத்தில் அதிகாலை 2:00 மணிக்கு ஏற்பட்டது. புதுடெல்லி சுமார் 1,400 கிலோமீட்டர் தொலைவில் இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க நிலநடுக்கத்தைப் பதிவு செய்தது.

அருகிலுள்ள கஜகஸ்தானில், அவசரகால அமைச்சகம் 6.7 ரிக்டர் அளவில் ஒரே மாதிரியான நிலநடுக்கத்தை பதிவு செய்ததாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. முதன்மை நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 14 அதிர்வுகள் ஏற்பட்டதாக தெரிவிக்கபட்டுள்ளது. இதன் தாக்கமாக டெல்லியிலும் லேசான நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் வாலிபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 7 பேர் பலி

**அமெரிக்கா : ஜன. 24,**

**அமெரிக்காவின் சிகாகோ அருகே உள்ள மாநிலத்தில் இரண்டு வீடுகளில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**



சிகாகோ அருகில் உள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தின் ஜோலியட் என்ற பகுதியில் வாலிபர் ஒருவர் இரண்டு வீட்டிற்குள் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். இதில் ஏழு பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்துள்ளனர் என போலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். மேலும் துப்பாக்கிச்சூடு நடத்திய வாலிபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். 23 வயதான அவருடைய பெயர் ரோமியோ நான்ஸ். சிகப்பு கலர் டொயோட்டா காம்ரி காரில் தப்பியோடிவிட்டார். ஆயுதங்களுடன் உள்ள அவர் ஆபத்தானவர் எனவும் எச்சரித்துள்ளார்.

நான்ஸ் மற்றும் அவரது கார் குறித்து தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுக்குமாறு போலீஸ் தரப்பில் கேட்டுக்கொள்ளப பட்டுள்ளது. அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு வன்முறை சம்பவம் அதிகரித்து வருகிறது. இந்த வருடத்தில் முதல் மூன்று வாரங்களில் மட்டும் துப்பாக்கிச்சூடு தொடர்பாக 875 பேர் உயிரிழந்துள்ளனர்.

# அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ராணுவம் இணைந்து ஏமன் மீது தாக்கு

**ஏமன் : ஜன. 24,**

**ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சிக்குழு செங்கடலில் செல்லும் வணிக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எச்சரித்த போதிலும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நிறுத்தவில்லை.**

இதனால கடந்த சில தினங்களுக்கு முன் அமெரிக்கா, இங்கிலாந்து ராணுவம் ஒன்றாக இணைந்து ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை இரவு 2-வது முறையாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களை நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்க போர்க்கப்பல், நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள், போர் விமானங்கள் மூலம் ஏவுகணைகள், டிரோன்கள், லாஞ்சர்கள் போன்வற்றை சேமித்து வைத்திருக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு உளவு மற்றும் கண்காணிப்பு பணி ஆகியவற்றில் ஆஸ்திரேலியா, பஹ்ரைன், கனடா, நெதர்லாந்து நாடுகள் பங்களிப்பு இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்த நாடுகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக கூட்டு அறிக்கை வெளியிட்டுளளது. எங்களுடைய நோக்கம் செங்கடலில் பதற்றம் தணிய வேண்டும். நிலைத்தன்மை மீண்டும் திரும்ப வேண்டும் என்பதுதான் எனவும் தெரிவித்துள்ளது. அதேவேளையில் உலகின் முக்கிய கடல் போக்குவரத்து வழியான செங்கடலில் எளிதான வணிக போக்குவரத்து நடைபெறுவதற்கும், உயிரைக்காப்பாற்றுவதற்கும் ஹவுதிக்கு பதிலடி கொடுக்க தயங்கமாட்டோம் எனவும் எச்கரிக்கை விடுத்துள்ளது.

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இந்தியாவை ஆதரிக்கும் மஸ்க்



**அமெரிக்கா : ஜன. 24,**

**டெஸ்லா, எக்ஸ், எக்ஸ்ஏஐ உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்களின் நிறுவனர், அமெரிக்காவை சேர்ந்த உலகின் நம்பர் 1 கோடீசுவரரான 52 வயதான**

இவர் பல சர்ச்சைக்குரிய விஷயங்களில் தனது வெளிப்படையான அதிரடி கருத்துகளுக்கு பெயர் போனவர். இந்நிலையில், ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குடெரஸ், தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில், “பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் குழுவில் ஆப்பிரிக்க கண்டத்தை சேர்ந்த எந்த நாட்டிற்கும் இடம் இல்லாதது கவலையளிக்கிறது. 80 வருடங்களுக்கு முன் இருந்த நிலையை உலக அமைப்புகள் கடந்து தற்போது உள்ள சமகால சவால்களையும், உண்மை நிலவரத்தையும் உணர வேண்டும்” என பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக அமெரிக்க-இஸ்ரேல் வம்சாவளி தொழிலதிபரான மைக்கேல் ஐசன்பர்க், “ஐ.நா. பாதுகாப்புகவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் அமைப்பில் இந்தியா இடம் பெறாதது ஏன்? ஐக்கிய நாடுகள் அமைப்பை கலைத்து விட்டு ஒரு உறுதியான தலைமையின் கீழ் ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டும்” என எக்ஸ் கணக்கில் கருத்து தெரிவித்தார்.

ஐசன்பர்கின் கருத்தை ஆமோதிக்கும் வகையில் எலான் மஸ்க் தனது எக்ஸ் கணக்கில் பதிவிட்டார். அதில் அவர் தெரிவித்ததாவது: வருங்காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பையும், அதன் கிளை அமைப்புகளையும் கலைத்துதான் ஆகவேண்டும். உலகிலேயே அதிக மக்கள் தொகையை கொண்ட இந்தியாவை போன்ற பெரிய நாடு, ஐ.நா. சபையில் நிரந்தர உறுப்பினராக ஏற்கப்படாதது அறிவற்ற செயல். அத்துடன் ஆப்பிரிக்காவிற்கும் அப்பதவி அளிக்கப்பட வேண்டும் என நான் நினைக்கிறேன் என்று மஸ்க் பதிவிட்டார்.

# இலங்கையின் தெற்கு மாகாணத்தில் 5 பேர் சுட்டுக்கொலை

**கொழும்பு : ஜன. 24,**

**பரபரப்பான நெடுஞ்சாலையில் பட்டப்பகலில் நடந்த இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் அங்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**



இலங்கையின் தெற்கு மாகாணம் பெலியட்டா நகரில் உள்ள நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை ஜீப் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது மற்றொரு வாகனத்தில் ஜீப்பை பின்தொடர்ந்து வந்த மர்ம நபர்கள் சிலர் ஜீப்பை வழிமறித்தனர்.

அதன் பின்னர் அந்த மர்ம நபர்கள் ஜீப்பில் இருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பி சென்றனர். இதில் 5 பேரின் உடலில் துப்பாக்கி குண்டுகள் துளைத்தன. அவர்களில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியான நிலையில், காயமடைந்த மற்றொருவர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் மருத்துவமனை செல்லும்வழியிலேயே அவரும் பரிதாபமாக உயிரிழந்தார். பட்டப்பகலில் பரபரப்பான நெடுஞ்சாலையில் நடந்த இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் அங்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கூலிப்படை கும்பலை சேர்ந்தவர்களே இந்த துப்பாக்கிச்சூட்டை நடத்தியிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். எனவே அந்த கோணத்தில் போலீசார் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர்.

இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் கூலிப்படை கும்பல்களின் செயல்பாடுகளை தடுப்பதற்கான சிறப்பு நடவடிக்கையை போலீசார் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கியதும், இதுவரை சுமார் 40 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கோல்டன் விசா திட்டத்தை ரத்து செய்ய ஆஸ்திரேலியா முடிவு

**ஆஸ்திரேலியா : ஜன. 24,**

**ஆஸ்திரேலியா அரசு கடந்த 2012-ம் ஆண்டு கோல்டன் விசா என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத்தின் நோக்கம், அதிக சொத்து மதிப்புமிக்க வெளிநாட்டு தொழில் அதிபர்கள் நிரந்தரமாக ஆஸ்திரேலிய குடியுரிமை வழங்குவதற்கு வழிவகுப்பதாகும்.**



இதன் மூலம் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் ஆஸ்திரேலியாவில் முதலீடு செய்ய வாய்ப்பு ஏற்படும் என ஆஸ்திரேலியா நினைத்தது. ஆனால், ஆஸ்திரேலியா நினைத்தது. ஆனால், ஆஸ்திரேலியா நினைத்தபடி இந்த கோல்டன் விசா திட்டம் ஆஸ்திரேலியா நாட்டிற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் மிகப்பெரிய அளவில் உதவவில்லை. இதனால் இத்திட்டத்தை ரத்து செய்ய ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது.

அதற்குப் பதிலாக திறன் வாய்ந்த தொழிலாளர்களுக்கு அதிக அளவில் விசா வழங்க கவனம் செலுத்த இருப்பதாக தெரிவித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட முதலீடுகளில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் குறைந்த பட்சம் 5 மில்லியன் அமெரிக்க டாலர் அளவில் முதலீடு செய்தால், ஆஸ்திரேலியாவில் ஐந்து ஆண்டுகள் வரை தங்கியிருக்க முடியும். வெளிநாட்டைச் சேர்ந்த அதிகமான முதலீட்டார்களை ஈர்ப்பதற்கான இந்த திட்டத்தை ஆஸ்திரேலியா கொண்டுவந்தது. கான்பெர்ரா ஆயிரக்கணக்கான கோல்டன் விசாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 85 சதவீதம் சீனாவைச் சேர்ந்த கோடீஸ்வரர்கள் ஆவார்கள்.

ஆனால் ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக பணத்தை வைக்கவும், பணமோசடியில் ஈடுபடுவதற்கும், பணம் தொடர்பான பிற மோசடிகளுக்கும் அனுமதிப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. 2016-ல் நடத்தப்பட்ட ஆய்விலும் இது தெரியவந்தது.

# மதுபானங்கள் மீதான வரியை உயர்த்துதல் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிப்பு





# வேங்கைவயல் வழக்கை சிபிஐ விசாரணைக்கு ஒப்படைக்க ராமதாஸ் வலியுறுத்தல்

# கோடநாடு வழக்கு எடப்பாடியை தொடர்புபடுத்தி கருத்து தடையை நீக்கக் கோரி உதயநிதி பதில் மனு




சென்னை / புதுக்கோட்டை | 24.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சா. பஞ்சு , தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் (பி.1915) (இ.1984)



ராஜேஸ்வரி சாட்டர்ஜி , இந்தியாவின் முதல் பெண் அறிவியலாளர் (பி.1922) (இ.2010)



சி. பி. முத்தம்மா , இந்திய சிப்பாய், சாதனையாளர் (பி.1924) (இ.2009)



கர்ப்பூரி தாக்கூர் , பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் (பி.1924) (இ.1988)



## இன்றைய நினைவு நாள்

சி. கே. சுப்பிரமணிய முதலியார் , தமிழறிஞர், உரையாசிரியர் (பி.1878) (இ.1961)



ஓமி பாபா , இந்திய இயற்பியலாளர் (பி.1909) (இ.1966)



சுகுமார் அழீக்கோடு , இந்திய எழுத்தாளர் (பி.1926) (இ.2012)



## தேசிய பெண் குழந்தை நாள் (இந்தியா)